# 10

# ஆண்டு நிறைவு மலர்

373
KAL
(R)

மஹ்மூத் மகளிர் மகா வித்தியாலயம்

ai Mahmud Balika Maha Vidyalaya

*With the best Compliments*

*of*

# SINGER SRI LANKA LTD.

**Police Road**

**KALMUNAI**

Library.
University of Jaffna
2007.
373
KAL R

# பத்தாவது ஆண்டு நிறைவு மலர்

1983

REFERENCE

கல்முனை மஹ்மூத் மகளிர் மகா வித்தியாலயம்

**Kalmunai Mahmud Balika Maha Vidyalaya**

# பாடசாலைக் கீதம்

சிரம் பணிந் திறை பதம் தினம் தொழுவோமே
சீர் கலை யாம் பெறுவோமே.
ஜெயமே ஜெயமே ஜெயமே
ஜெய ஜெய ஜெய ஜெயமே

மாதர் குலம் எதிர் காலம் சிறந்து
மாசறு வாழ்வு சிறந்து
ஓதிய மாதென ஒளி பெற வாழ்ந்து
உயரறம் இதுவெனச் சூழ்ந்து
உண்மையை ஓதிடுவோமே
நன்மையைத் தேடிடுவோமே
தின்மையைத் தீர்த்திடுவோமே
ஜெயமே ஜெயமே ஜெயமே
ஜெய ஜெய ஜெய ஜெயமே

பேர் மகுமூது பெண் மாகலைக் கூடம்
பெருகிய சிறுமியர் பாடம்
ஆர்வமடோதினர் ஞாலம் விளங்க
அகமது நாளும் துலங்க
அறிவொளி பெருகிடுவோமே
அறநெறி மருவிடுவோமே
அமலனைப் புரிந்திடுவோமே
ஜெயமே ஜெயமே ஜெயமே
ஜெய ஜெய ஜெய ஜெயமே.

# MAGAZINE COMMITTEE

PATRON:

**M. C. A. HAMEED Esqr.** ( Principal )

PRESIDENT :

M. H. Yaqub Esq ( Deputy Principal )

EDITORS :

Z. M. Aliyar Esq.
A. H. A. Bazeer Esq.

SECRETARIES :

Mrs. J. Athambawa
Mrs. S. H. M. M. A. Cader

TREASURER :

M. I. Sirajudeen Esq.

MEMBERS :

Mrs. K. Mohaideen Pitchai
Mr. P. M. Ismail
Mrs. F. A. C. Mohaideen
Mrs. S. P. A. Raheem

## எங்கள் அதிபர்


தண்ணளி காட்டும் கண்கள்
தயவினைக் காட்டும் சிந்தை
கண்ணியம் மிக்க தோற்றம்
கருத்தினை யீர்க்கும் பேச்சு
நண்ணினுர்க் கென்றும் மிக்க
நயத்தினை யளிக்கும் மேன்மை
நுண்ணியே எதையும் நோக்கும்
நீர்மையும் கொண்டோ ரம்மா.

கடமையி லுறுதி கண்டோம்
கல்வியி லெழுச்சி கண்டோம்
திடமுடன் கருமம் மூச்சாய்த்
திகழ்ந்திடக் கண்டோ மெந்த
விடத்திலுங் கலாகூ டத்தின்
வீறதை விளங்க வைத்துச்
சுடர்புக ழொழி பரப்பும்
சுத்தரெம் மதிப ரம்மா.

மங்கையர் கல்வி யோங்க
மட்டிலாச் சிரமந் தாங்கி
எங்கெலா முயன்று தேவை
எவையெனத் தேர்ந்து பெற்றும்
பங்கம்வந் துற்ற போதும்
பதறிடா தவைமேற் கொண்டு
தங்கமாய்ப் புடம்போட் டெம்மைத்
தந்ததோர் பொறைரு ரம்மா


இமைக்கிலா நயனங் கொண்டு
இடுக்கண்க ளமைச்சூ ளாது
சுமையெலாந் தாங்கிக் கூடம்
சுடர்பெறப் பிரகா சிக்கச்
சமைத்திகம் புகழ்ம ணக்கச்
சாதனை புரிந்தெம் முள்ளம்
அமைவுற நிற்கு மெங்கள்
அதிபரைப் புகழு வோமே.

திருமதி பரீதா நயீம் ஷரிபுத்தீன்




M. C. A. Hameed Esqr.

**OUR PRINCIPAL**



# Message
## by
# Hon. Ranil Wickremasinghe

( Minister of Education and Youth Affairs )

I have great pleasure in sending this message on the occasion of the Tenth Anniversary Celebration of the upgrading of the school to the status of a Maha Vidyalaya. Mahmud Balika Maha Vidyalaya is today a full fledged school with classes up to Advanced Level, well equipped and provided with the right environment for the all round development of the Muslim Girls. I am glad to note the rapid progress Mahmud Balika Maha Vidyalaya has made in the academic and other spheres during the

past decade. This achievement would not have been possible but for the devotion of the principal, the staff and the children and the co-operation and commitment of the parents and the well wishers. My congratulations go out to all of them.

I wish Mahmud Balika Maha Vidyalaya
a bright future.

*Ranil Wickremasinghe*

Ministry of Education,
Malay Street,
Colombo - 2



முன்னாள் கல்வி அமைச்சர்

## அல்ஹாஜ் கலாநிதி பதியுத்தீன் மஹ்மூத்

அவர்களின்

# ஆசிச் செய்தி

கல்முனை மஹ்மூத் மகளிர் மகா வித்தியாலயத்தின் பத்தாவது நிறை வாண்டைக் கொண்டாடு முகமாக வாழ்த்துச் செய்தியை அனுப்புவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

வரலாற்றிலே பத்து வருடங்கள் என்பது மிகவும் குறுகிய காலமாகும். இக்குறுகிய காலத்திலே இவ்வித்தியாலயம் பெரும் முன்னேற்றம் அடைந் துள்ளதைப் பார்க்கும் பொழுது அதனைப் பாராட்டாமலிருக்க இயலாது.

வெற்றிப் பாதையை நோக்கி இக்கல்லூரி விருத்தியடைந்து கொண் டிருக்கின்றது. அதனைப் பாதுகாத்துக்கொள்வது மிகவும் அவசியமாகும்.

அதன் முன்னேற்றத்தைத் தடையின்றி அபிவிருத்தி செய்துகொண்டு போவதாயின் பின்வரும் நான்கு அம்சங்களும் சரியாகச் செயல்பட வேண்டும்.

1. ஆற்றலும் தகுதியும் மிக்க அதிபர்.

2 சக ஆசிரியர்களது ஒத்துழைப்பு.


3. தியாக உள்ளமும் நேர்மையும் மிக்க மாணவர்கள்.

4. பெற்றேர்களது உற்சாகமும் ஒத்துழைப்பும்.

மேற்கூறிய நான்கு அம்சங்களும் ஒரே நோக்கிலே ஒத்துழைத்து உற்சாகமாக முயன்றால் எப்பாடசாலையினது தரமும் உயருமேயன்றித் தாழ்ந்து விடாது.

கல்முனை மகளிர் மகா வித்தியாலயம் எல்லா வகையிலும் சிறப்புற்று ஒரு தலையாய எடுத்துக்காட்டான மகா வித்தியாலயமாக முழுக் கிழக்கு மாகாணத்திற்குமே திகழவேண்டுமென்று பிரார்த்திக்கின்றேன்.

கலாநிதி அல்ஹாஜ் பதியுதீன் மஹ்மூத்



**கல்முனை பாராளுமன்ற உறுப்பினரும்,**
**முல்லைத்தீவு மாவட்ட அமைச்சருமான**

## ஜனாப் ஏ. ஆர். மன்சூர்

**அவர்களின்**

# ஆசிச் செய்தி

கல்முனை மஹ்மூத் மகளிர் மகா வித்தியாலயத்தின் பத்தாண்டு நிறைவு விழாவினைச் சிறப்பிக்கின்ற இம்மலருக்கு இச்செய்தியை வழங்குவதில் நான் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

முஸ்லிம் மாதரின் தலைமைத்துவத் தேவையே எமது சமுதாயத்தின் சமகால முதன்மைத் தேவையாக எனக்குத் தென்படுகின்றது. இதனை நிறைவு செய்ய எம்மகளிர் எமது பண்பாட்டுடன் இணைந்த உயர் கல்வியை சகல துறைகளிலும் பெற வேண்டும். ஆங்கிலம் கற்க வேண்டும்; அறபு கற்க வேண்டும்;

பிற மொழிகளிலும் பாண்டித்தியம் பெறல் வேண்டும். தியாக சிந்தை, சேவை மனப்பான்மை, தேசியம் சிதைவுறாத சமூக உணர்வு உடையோராதல் வேண்டும். எல்லோரையும் நேசிக்க வேண்டும். தலைமை தாங்குவதில் தயக்கம் காண்பிக்கக் கூடாது. ஆளுமைக்கான இவ்வம்சங்கள் எல்லாவற்றிலும் பயிற்சியளித்து தேர்ச்சியுறச் செய்வதில் கல்முனை மஹ்மூத் மகளிர் மகாவித்தியாலயம் கடந்த பத்து ஆண்டுகளில் பெரும் வெற்றியை ஈட்டியுள்ளது. அதன் மூலம் உன்னதமான ஒரு தாக்கத்தை இஸ்லாமிய இனத்தில் ஏற்படுத்தி இருக்கின்றது. மேலும் அவ்வழியில் அரும்பெரும் சாதனைகள் புரியக் கூடிய தகைமைகளைத் தன்னிடம் வைத்துக்கொண்டிருக்கின்றது.

எமது மகளிர் மகா வித்தியாலயத்தில் இவ்வுயர்ந்த நிலைமைகளை உருவாக்குவதில் அதிபர் ஜனாப் எம். சீ. ஏ. ஹமீத் அவர்கள், ஆசிரிய குழுவினர், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர், சமூக சேவை தாபனங்கள், பழைய மாணவர், பெற்றோர், இப்பிரதேசப் பிரமுகர்கள், கல்வித் திணைக்கள உத்தியோகத்தர்கள் ஆகியோர் அயராது உழைத்துள்ளனர்; உழைத்து வருகின்றனர். கல்முனைத் தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினர் என்ற முறையில் நான் சார்ந்திருக்கும் ஐக்கிய தேசியக் கட்சி அரசின் மூலமாகவும் வேறு சில வழிகளாலும் இவ்வித்தியாலயத்துக்கு இதுவரை சில சேவைகளைச் செய்யக் கிடைத்தமை என் பாக்கியமே. இன்றும் இந்த மகா வித்தியாலயத்தை வெகு விரைவில் ஓர் உயர்ந்த கலா பீடமாகத் திகழச் செய்தற்கு உரிய திட்டங்களை வகுத்துச் செயற்படுத்திக்கொண்டும் இருக்கிறேன். இறைவனின் நாட்டம் எதுவோ?

இம் மகா வித்தியாலயத்தின் கடந்த கால முன்னேற்றம் குறித்து நான் மிக்க திருப்தியடைகிறேன்; மகிழ்ச்சி எய்துகின்றேன். இது மேலும் மேலும் உயர்ந்து வளரவேண்டும்! அதன் மூலம் எம் இஸ்லாமியப் பெண்குலம் எழுச்சியுறல் வேண்டும்! இந்நாட்டிலே உள்ள தலையாய கல்லூரிகளில் ஒன்றாக இப் பெண்கள் கலாசாலை பூத்துப் பொலிவுறவேண்டும் என்பதே எம் எல்லோரினதும் ஆசை.

கல்முனை

ஏ. ஆர். மன்சூர்



### கல்முனைத் தொகுதியின்
### முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்
## ஜனாப் எம். சீ. அகமது
### அவர்களின்
# ஆசிச் செய்தி

கல்முனை மஹ்மூத் மகளிர் மகா வித்தியாலயம் பத்தாண்டு பூர்த்தி விழாவினைக் கொண்டாடுவது கண்டு மிக்க மகிழ்வடைகின்றேன்.

எனது அரசியல் வாழ்வில் பொதுசன நலன்கருதி செய்யப்பட்ட அரிய பல சேவையினுள் சிகரமாக இவ்வித்தியாலயம் பெண்களுக்கு அமைந்தது குறிப்பிடத்தக்கது.

இவ்வித்தியாலயம் அல் அமான் ஆரம்பப் பாடசாலையாக ஒரு சிறு துண்டு நிலப்பரப்பில் அமைந்திருந்தது. இறைவன் தந்த அருளாலும், அப்போது கல்வி அமைச்சராக இருந்த அல் ஹாஜ் டொக்டர் பதியுத்தீன் மஹ்மூத் அவர்கள் தந்த உதவியாலும், கல்முனைக்குடி, சாய்ந்தமருது கிராமங்களின் இருபதினாயிரம் குடிமக்களுக்குப் பொதுவாக இம்மகளிர்

மகா வித்தியாலயத்தை அமைக்க முடிந்தது இன்று அகில இலங்கை யிலிருந்தும் மாணவிகள் இங்கு பயின்றுவருவது கண்டு மகிழ்வடை கின்றேன்.

இவ்வித்தியாலயம் அமைக்க நிலப்பஞ்சம் ஏற்பட்டபோது எனது சகோதரர்கள் சிலர் பாதிக்கப்பட்டனர். அச்சகோதரர்கள் இன்று இக் கல்லூரியின் உயர்ச்சி நிலைகண்டு பெண்கள் உயர்கல்விக்கு நாம் மகத் தான தியாகங்கள் புரிந்தவர்கள் என்ற திருப்தியை அடைந்திருப்பார்கள் என நம்புகிறேன்.

இம் மகளிர் மகா வித்தியாலயத்திற்கு அதிபராக ஜனாப் எம். சீ. ஏ. ஹமீது அவர்களை, அவர் ஆணுக இருந்தபோதிலும் துணிந்து நியமித் தோம். அவரது அயராத உழைப்பைக் கண்டு பூரிப்படைவதோடு, இம் மகாவித்தியாலயம் ஆரம்பித்த காலத்தில் பல சிரமங்களையும் பொருட் படுத்தாது இதனை இந்நிலைக்கு உயர்த்துவதற்கு அரும்பாடுபட்ட அதிபர், ஆசிரியர்கள், ஆசிரியைகள் எல்லோரையும் மனமார வாழ்த்துகின்றேன்.

இம் மகா வித்தியாலயத்தில் தோன்றும் அவ்வப்போதைய தேவைகள் எதிர்காலத்தில் பூரணமாகச் செயல்படுத்தப்பட வேண்டும் எனப் பிரார் த்திப்பதோடு, இப் பத்தாண்டில் பல்கலைக் சழகத்துக்கும் மாணவிகளை அனுப்பியது கண்டு மகிழ்வதுடன், தொடர்ந்தும் பல துறைகளிலும் பல்கலைக்கல்வி பெறவேண்டுமென வாழ்த்துகிறேன்.

எம். சீ. அகமது

பிரதான வீதி,
கல்முனை - 7



# *Message of Felicitation*

*By*

## Mr. A. A. P. Gunawardena

( Director of Education, Ampara )

It gives me great pleasure to send this message of felicitation on the occasion the School Development Society of Km/Kalmunai Mahmud Balika Maha Vidyalaya celebrates the successful completion of a decade of dedicated and devoted service in education to the Muslim Girls of the District.


The rapid and steady progress of this premier girls institution in my District is a clear indication and manifestation of the planned development of female education among the Muslims of the District. This School was started from humble beginnings and has grown up to be a full - fledged Maha Vidyalaya providing general education from Kindergarten to the G. C E. Advanced Level classes in Arts, Commerce and Science subjects.

The pupils of this school have excelled themselves in education and extra and co-curricular activities. They have attained high standards in the examination results, literary and sports competitions. The service of this institution has been widely acclaimed and as a result, students from the other Districts have sought admission recently consequent to the provision of residential facilities.

I should congratulate the principal and the staff for the fullest co-operation without which the rapid progress within 10 years would have been impossible. I warmly wish continuous success to this school in the decade to follow.

**A. A. P. Gunawardena.**

**Education Office,**
**Ampara.**



கல்முனை பிரதம கல்வி அதிகாரி

## ஜனுப் எம். ஐ. எம். செரீப்

அவர்களின்

# ஆசிச் செய்தி

முஸ்லிம் பெண்கள் சமுதாயத்துக்கு உயர் கல்வியில் ஒரு விடி வெள்ளியாகத் திகழும் கல்முனை மஹ்மூத் மகளிர் மகா வித்தியாலயம் பத்தாண்டு நிறைவைக் கொண்டாடும் இவ்வேளையில் பிரசுரமாகும் "பத்தாண்டு நிறைவு விழா" மலருக்கு ஆசிச் செய்தி ஒன்றினை வழங்குவதில் நான் பெரிதும் மகிழ்ச்சியடைகின்றேன். முஸ்லிம் பெண்கள் சமுதாயத்திற்கு மிகவும் அவசியம் தேவையான ஒரு ஸ்தாபனம் என்ற ஒரு பேருண்மையை கடந்த பத்து ஆண்டுகளில் இவ் வித்தியாலயம் உணர்த்தியுள்ளது. நாளைய பரம்பரையினர் சீர்வாழ்விற்கும் நல்வழிகாட்டி நிற்கின்றது. ஒரு பெண் பாடசாலையின் அடிப்படை நோக்கம் நான்கு அம்சங்களாகப் பிரிக்கப்படின் மிகையாகாது.

1. நாட்டுக்குத் தேவையான சிறந்த வீட்டு ராணிகளை உற்பத்தி செய்தல்.
2. நாட்டுக்குத் தேவையான உயர்ந்த தாய்க் குலத்தை ஆக்கல்.
3. நாட்டின் அபிவிருத்திக்குத் தேவையான அரச சேவை பெண்மணிகளை ஆக்கல்.

4. ஆண்களோடு தோளோடு தோள் நின்று ஒரு வீட்டு, நாட்டு தேவைகளையும் அபிவிருத்தி வேலைகளையும் பூர்த்தி செய்வதற்காக உழைக்கும் வாழ்க்கைத் துணைவியரை உற்பத்தி செய்தல்.

மேற்கூறப்பட்ட நோக்கங்களைக் கருத்திற் கொண்டு இவ் வித்தியாலயம் ஆக்கபூர்வமான பல நிகழ்ச்சிகளுள் ஈடுபட்டு, இவ்வித்தியாலயத்தின் நோக்கம் நிறை வேறுவதற்கு கடந்த பத்து ஆண்டுகளில் உழைத்துள்ளமையையிட்டு இக் கல்வி மாவட்ட பிரதான கல்வி அதிகாரி என்ற முறையில் இவ்வித்தியாலயத்தை வாழ்த்துவதில் பெரு மகிழ்ச்சியடைகின்றேன்.

பத்து வயது பூரணமாகிய பெண் குழந்தையின் பொலிவும், பூரிப்பும், வளர்ச்சியும் பெற்றோரை, உறவினரை மட்டுமல்ல ; ஏனையோரையும் கவர்வது இயல்பாகும். இக்குழந்தையின் பத்தாண்டு வளர்ச்சிக்கு என்னால் இயன்ற ஆக்கபூர்வமான பணிகளைச் செய்வதற்கு எனக்கு வாய்ப்பும், வசதியும் கிடைத்தமை வரப்பிரசாதமெனக் கருத்திற் கொள்கிறேன். இக்குழந்தையின் ஆரம்ப நிலையிலேயே இருந்து இதன் வளர்ச்சிக்கு இன்றுவரை தொடர்ந்து உழைக்கும் வாய்ப்பும் வசதியும் எனக்களித்த எல்லாம் வல்ல இறைவன் ஆசிகொண்டு, தொடர்ந்தும் என்னாலான பணிகளைச் செய்வதில் ஒருபோதும் பின் நிற்பன் அல்லன். ஆரம்ப நிலையிலிருந்து ஆக்கத் தந்தையாக உழைத்த அதிபர், ஆசிரியர்களை வாழ்த்துவதுடன், இவ்வித்தியாலய வளர்ச்சியில் என்றும் கண்ணும் கருத்துமாயுள்ள பெற்றோர்களையும் நலன் விரும்பிகளையும் வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

''வாழ்க மஹ்மூத் மகளிர் மகா வித்தியாலயம்
பல்லாண்டுகளாக, ஆமீன்.''

எம். ஐ. எம். செரீப்

கல்வி அலுவலகம்,
கல்முனை.



கல்முனை வட்டாரக் கல்வி அதிகாரி

## ஜனாப் எம். பி. எச். மொஹமட் பி. ஏ, டிப். இன் எட்.

அவர்களின்

# ஆசிச் செய்தி

கல்முனை மஹ்மூத் மகளிர் மகா வித்தியாலயத்தின் பத்தாண்டு நிறைவையொட்டி வெளியிடப்பட விருக்கும் சிறப்பு மலருக்கு வட்டாரக் கல்வி அதிகாரி என்ற முறையிலும் நலன் விரும்பி என்ற வகையிலும் இவ் ஆசிச் செய்தியை வழங்குவதில் பெரிதும் புளகாங்கிதம் அடைகிறேன்.

இப்பகுதி வாழ் முஸ்லிம் மகளிருக்கென சகல வசதிகளுமடங்கிய உயர் மகா வித்தியாலயம் ஒன்று உருவாக்கப்பட வேண்டும் என்ற நீண்ட கால அவா நிவர்த்திக்கப்பட்டு பத்தாண்டுகள் நிறைவேறுகின்ற இச் சந்தர்ப்பம் இப்பகுதி வாழ் மக்களின் கல்வி வரலாற்றில் ஒரு முக்கிய நிகழ்வும் பெருமிதமடைய வேண்டிய ஓர் அம்சமுமாகும்.

கடந்த பத்தாண்டுகளில் இவ்வித்தியாலயம் மகளிர் கல்வி முன்னேற்றத்திற்காக அரும் பணிகள் ஆற்றியுள்ளது. தொடர்ந்தும் மகளிர் கல்விப் பணி பல் துறைகளிலும் பெருகவேண்டுமென இச்சந்தர்ப்பத்தில் எனது நல்லாசிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.


இவ்வித்தியாலயத்தின் தோற்றத்திற்காகவும் விருத்திக்காகவும் முன்னேற்றங்களுக்காகவும் சேவை புரிந்த அரசியல் பிரமுகர்கள், கல்வித் திணைக்கள உயர் அதிகாரிகள், அதிபர், ஆசிரியர்கள், பெற்ருேர், நலன் விரும்பிகள் ஆகிய அனைவருக்கும் எனது உளம் நிறைந்த பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அத்தோடு இக்கலா நிலையம் பெரு விருட்சமென வளர்ந்து கிழக்கிலங்கையின் கல்விச் சோலையில் சிறந்த நறுமலர்களையும் தீங்கனிகளையும் சமுதாயத்திற்குப் பெருவாரியாகப் பெற்றுத்தர குறித்த சேவையாளர்கள் நற்சேவைகளைத் தொடர்ந்தளிக்க முன்வர வேண்டுமெனவும் வினயமுடன் வேண்டுகிறேன்.

இம்மகா வித்தியாலயத்தின் எதிர்காலம் ஏற்றமுறவும் அதிபர், ஆசிரியர், ஏனைய சேவையாளர்களின் நற்பணிகள் நன்கு பரிணமிக்கவும் எதிர்கால மகளிர் சமுதாயம் மறுமலர்ச்சி காணவும் எல்லாம் வல்ல இறைவனின் அருளை வேண்டி நிற்கிறேன்.

**எம். பி. எச். முஹம்மது**

**பெரிய பள்ளி வீதி,**
**கல்முனை.**



கல்முனை வட்டாரக் கல்வி அதிகாரியாக இருந்தவரும்,
கல்முனை மாவட்டக் கல்வி அதிகாரியாகக் கடமை புரிந்தவரும்,
தற்போதைய நிந்தவூர் அல் அஷ்றக் மகா வித்தியாலய
(SLES - Class IV) அதிபருமான

## ஜனாப் கே. எல். சின்னலெவ்வை

அவர்களின்

# ஆசிச் செய்தி

கல்முனை மஹ்மூத் மகளிர் மகா வித்தியாலயம் தனது பத்தாண்டைக் கொண்டாடு முகமாக வெளியிடும் இச்சஞ்சிகைக்கு எனது வாழ்த்துக்களை அனுப்புவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன்.

முஸ்லிம்கள் செறிந்து வாழும் கல்முனை மாவட்டத்திலே முஸ்லிம் பெண்களுக்கென ஓர் உயர் கல்வி நிலையம் இல்லை என்ற கவலையில் பல ஆண்டுகளாக ஆழ்ந்திருந்தேன். 1970-ம் ஆண்டு கல்முனை வட்டாரத்தின் கல்வி அதிகாரியாக நான் பதவியேற்ற போது, இக்குறையை நிவர்த்தி செய்வதற்கான சந்தர்ப்பம் கிடைத்தது.

கால் ஏக்கர் நிலத்துடனும், இரு சிறிய கட்டிடங்களுடனும் இயங்கி வந்த அல். அமான் வித்தியாலயத்தை, கல்முனை மஹ்

மூத் மகளிர் மகா வித்தியாலயமாக மாற்றுவதற்குரிய பிரேர ணையை கல்முனைக் கல்விக் காரியாலயத்தில் சமர்ப்பித்தபோது கடும் எதிர்ப்புக்களுக்கும் விமர்சனங்களுக்கும் இடையில் அது ஏற்றுக் கொள்ளப்பட்டது.

05-01-1971 ல் கல்முனை மஹ்மூத் மகளிர் மகா வித்தியா லயம் என்ற இக்குழந்தை பிறந்தது. அதைப் பராமரித்து வளர்க் கும் பொறுப்பை இன்றைய அதிபர் ஜனாப் எம். சீ. ஏ. ஹமீது அவர்கள் பல கஷ்டங்களின் மத்தியில் அன்று ஏற்றுக் கொண் டார். அதிபர், ஆசிரியர், பெற்றோர் ஆகியோர் இரவு பகலாக அயராது உழைத்தனர். நானும் என்னால் ஆனதைச் செய்தேன். நிலம் சுவீகரிக்கப்பட்டது. கட்டிடங்கள் எழுந்தன. இவற்றுக் கெல்லாம் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜனாப் எம். சீ. அகமது அவர்களும், அப்போதைய கல்வி அமைச்சர் டொக்டர் அல்ஹாஜ் பதியுத்தீன் மஹ்மூத் அவர்களும் தங்களது முழு ஆதரவினையும் நல்கினர். மற்றவர்கள் பொறாமைப் படக்கூடிய வாறு குழந்தை மிக வேகமாக வளர்ந்தது. தற்போதைய கல் முனைத் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் ஜனாப் ஏ. ஆர். மன்சூர் அவர்களும் தமது பங்களிப்பைச் செவ்வனே தொடர்ந் தார்.

இன்று சகல வசதிகளுடனும், நல்ல பெறுபேறுகளுடனும், விடுதி வசதியுடனும் ஓர் உயர்ந்த கல்லூரியாக இது வளர்ந்தி ருப்பதைக் காணும்போது என்னைவிட மகிழ்ச்சியடையக் கூடிய வர்கள் யாரும் இருக்கமுடியாது.

இக்கல்லூரியில் இன்று இருக்கின்ற சில குறைகளும் நீங்கி, பூரணத்துவம் பெற்ற ஒரு கலாசாலையாக, இஸ்லாமிய நெறி களை உறுதியாகக் கடைப்பிடிக்கின்ற - இளம் முஸ்லிம் பெண்கள் சமுதாயத்தினை உருவாக்கக்கூடிய ஓர் அதி உன்னத உயர் கல்வி நிலையமாக இயங்க வேண்டுமென்று என் இதயபூர்வமாக வாழ்த்து கின்றேன். இதற்கு எல்லாம் வல்ல அல்லாஹ் உதவி புரிவானாக.

கே. எல். சின்னலெவ்வை

## உள்ளே புகுமுன்...........

கிழக்கிலங்கை முஸ்லிம் பெண்களின் கல்வி வரலாற்றில் ஒரு விடி வெள்ளியாக ஒளிரும் கல்முனை மஹ்மூத் மகளிர் மகா வித்தியாலயம் கடந்த பத்தாண்டு காலமாக சமுதாயத்தில் விழிப்பையும் கல்வி எழுச்சியையும் ஏற்படுத்தி வருகிறது. எமது கல்லூரியைப் பொறுத்தவரை இப்பத்தாண்டு கால இடைவெளியில் நாம் செயற்படுத்தியவை, செயற்படுத்த நினைத்தவை அநேகம். இதன் பிரதிபலிப்புத்தான் இக்கன்னி வெளியீடாகும்.

பத்தாண்டு கால இடைவெளிக்குப் பிறகு இம்மலரை வெளியிடுவது அனைவருக்கும் மகிழ்ச்சி தரக்கூடிய ஒன்றாகும். எம் கல்லூரியின் பத்தாண்டு இறுதியிலேயே இம்மலரை வெளியிட எண்ணினோம். எனினும் எமக்கேற்பட்ட சிற்சில தடங்கல்கள், நடைமுறைச் சிக்கல்கள் காரணமாக காலந்தாழ்த்தி இதனை வெளியிடுகின்றோம்.

எமது கல்லூரியின் இப் பத்தாண்டு மலர் எவ்வாறு அமைய வேண்டும் என்பது பற்றி எமக்குள்ள ஆசைகளும் கற்பனைகளும் பல. எனினும் அவ்வாசைகளினதும், கற்பனைகளினதும் செயற்பாட்டுக்கு வாய்ப்புக்கள் வசதியாக அமையவில்லை என்பதைக் கூறாமலிருக்க முடியவில்லை. எனவே ஓரளவு திருப்திகரமான மலராக இதனை வெளியிடுகின்றோம். ஆயினும் இம் மலரின் வாசனையும், எழிலும் குறையாதிருக்கக் காண்பீர்கள்.

இஸ்லாமிய கலாசார அம்சங்களுடன், எமது பிரதேசத்தின் கருத்தோட்டங்களையும், கலையாக்கங்களையும் ஒரு வரையறைக்கிடையில் இவ்விதழ் தர முயன்றுள்ளது. அறிக்கைகள் என்னும் பகுதியில் எமது அதிபரும், கல்லூரியின் இணைப்புச் செயலாளரும், பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளரும் இக் கல்லூரியின் பொதுவான சூழல், கலாசாரப் பின்னணி, வளர்ச்சி, இயக்கம், சாதனைகள், தேவைகள், இலட்சியங்கள் ஆகியவற்றைப் பிரதிபலிக்கும் வகையில் தம் அறிக்கை

களைத் தந்துள்ளனர். ஆக்கங்கள் என்னும் பகுதியில் கவிதைகள், கதைகள் என்பனவும்; சிந்தனைகள் என்னும் பகுதியில் கட்டுரைகளும் இடம்பெற்றுள்ளன. இதில் எமது கலாசாலை மாணவிகளின் ஆக்கங்கள் அதிகமாக இடம்பெற்றுள்ளன. மாணவிகளின் ஆங்கில ஆக்கங்களுக்கும் முக்கியத்துவம் அளிக்கும் பொருட்டு, ஆங்கிலத்தில் ஒரு பகுதியையும் இவ்விதழில் இணைத்துள்ளோம்.

எமது முயற்சியை வாழ்த்திச் செய்திகள் அனுப்பிய மாண்பு மிகு கல்வி அமைச்சர், முன்னாள் கல்வி அமைச்சர், மதிப்புக்குரிய கல்முனை பாராளுமன்ற உறுப்பினர், முன்னாள் கல்முனை பாராளுமன்ற உறுப்பினர், கல்விப் பணிப்பாளர், பிரதம கல்வி அதிகாரி, கல்முனை வட்டாரக் கல்வி அதிகாரி, முன்னாள் கல்முனை மாவட்டக் கல்வி அதிகாரி முதலியோரது அன்பும் நல்லெண்ணமும் எமக்கு மேலும் உற்சாகத்தைத் தருவதாகும். அவர்களுக்கு எமது நன்றிகள்.

இனி உங்களுக்கு வழி விடுகின்றேம்.

# அறிக்கைகள்

- அதிபர்
- கல்லூரி இணைப்புச் செயலாளர்
- பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர்

# அதிபரின் அறிக்கை

" எந்தச் செயலும் அதைத் தெரிந்து செய்தால்தான் சிறக்கும். அதற்குத் தான் முதலில் கல்வி தேவை. எனவே இஸ்லாத்தின் மிகச் சிறந்த செயல் (அமல்) கல்வியே! ", "கல்வி கற்பது ஒவ்வொரு ஆணின்மீதும் பெண்ணின்மீதும் கட்டாயக் கடமையாகும். " – இந்த நாயக வாக்கியங்கள் கல்வியின் முக்கியத்துவத்தையும் பெண் கல்வியின் அவசியத்தையும் வலியுறுத்துகின்றன.

கல்வி கற்கும் ஒருவரிடம், அவர் பயிலும் சூழலின் பிரதிபலிப்பை நிதர்சன மாகக் காணலாம். ஒரு முஸ்லிம் பெண் இஸ்லாமியச் சூழலில் கல்வியைப் பெறும் போது அவளது சமூகத்தின் கலாசாரம் அவளில் நன்கு செல்வாக்குச் செலுத்துவதைக் காணமுடியும். பிரதேச, இன, மத, பால் பாகுபாடின்றி எல்லோரும் கல்வியில் முன் னேறும் போதுதான் ஒரு நாடு உண்மையான முன்னேற்றமடைகிறது. இந்த வகையில் முஸ்லிம் பெண்களின் கல்வி வளர்ச்சிக்காக இப்பகுதியில் எமது மகா வித்தியாலயம் உருவாகி வளர்ந்து வருவது நம் நாட்டின் உயர்வுக்கு அடிகோலுவதாகும். இந்த மகளிர் மகா வித்தியாலயம் இப்பகுதிக்கு மாத்திரம் உரியதாயில்லாமல், இலங்கையின் பல பாகங்களிலிருந்தும் மாணவரைக் கொண்டிருப்பது பெருமைப்படத்தக்க விடய மாகும்.

1971ம் ஆண்டு, கல்முனைத் தொகுதியின் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த ஜனப் எம். சீ. அகமது அவர்களினதும், கல்வி அமைச்சராகவிருந்த டொக்டர் அல்ஹாஜ் பதியுத்தீன் மஹ்மூத் அவர்களினதும், கல்வி இலாகா உத்தி யோகத்தர்களினதும், ஆசிரியர்களினதும் பெரு முயற்சியினால் இப்பிரதேசத்தில் வாழும் முஸ்லிம் பெண்களின் கல்வி வளர்ச்சி கருதி இம்மகா வித்தியாலயம் உருவாக்கப்பட் டது.

இந்த மகளிர் மகா வித்தியாலயம் ஆரம்பிப்பதற்கென இடம்பெற்ற ஆலோ சனைக் கூட்டத்தில் கல்விப் பணிப்பாளர், பிரதேசக் கல்வி அதிகாரி, நாடாளுமன்ற உறுப்பினர் ஆகியோரின் வற்புறுத்தலுக்கமைய இக்கலாபீடத்தை மர்ஹூம் யூ. கலந்தர்ஷா அதிபரிடமிருந்து 05-01-1971 ல் நான் பொறுப்பேற்றபோது; ஆரம்பப் பிரிவிலிருந்து எட்டாம் வகுப்புவரை 855 மாணவிகளுடனும், 17 ஆசிரியர்களுடனும் கால் ஏக்கர் நிலப்பரப்பிலிருந்த இரு சிறிய கட்டிடங்களுடனும் மிக மிகக் குறைந்த வசதிகளோடு நிர்வாகத்தைத் தொடங்க வேண்டியிருந்தது. சக ஆசிரியர்கள், கல்வி இலாகா உத்தியோகத்தர்கள், பெற்றோர், நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோ ரின் உதவியுடன் இப்பாடசாலை படிப்படியாக வளர்ந்து இன்று ஐந்து ஏக்கர் நிலப் பரப்பையும்; விஞ்ஞான, மனையியல், வர்த்தக, நெசவு கூடங்களையும்; பல வகுப் பறைக் கட்டிடங்களையும், தொடர் மாடிக் கட்டிடங்களையும்; ஆசிரியர் விடுதி, தற் காலிக மாணவர் விடுதி, ஆராதனை மண்டபம் முதலிய பல கட்டிடங்களையும்; விளை யாட்டு மைதானம், குழாய் நீர் விநியோகம் இன்னோரன்ன பல வசதிகளையும் உள் ளடக்கிய – சுற்றிவர மதிலால் சூழப்பெற்ற மகா வித்தியாலயமாக - க. பொ. த.

உயர்தர விஞ்ஞான, வர்த்தக, கலை வகுப்புகள் வரை ஏறக்குறைய 1500 மாணவிகளுடன் ஓரளவு போதுமான வசதிகளோடு காட்சியளிக்கிறது.

வளர்ந்துவரும் மாணவர் சமுதாயம் பல தொழில் துறைகளிலும் பயிற்சி பெற கல்வியானது வாய்ப்பளிக்க வேண்டும் என்ற கல்விக் கொள்கைக்கிணங்க எமது கலாசாலை மாணவியரும் தையல், மனையியல், வர்த்தகம், விவசாயம், நெசவு போன்ற தொழில் துறைகளில் இங்கு பயிற்சி பெறுவது, அவர்களின் எதிர்கால வாழ்க்கையைத் திறம்பட மேற்கொள்வதற்கு உறுதுணையாயிருக்கும் என்பது திண்ணம்.

தற்போதைய அரசின் காலம் தொடக்கம், இப்பாடசாலையின் வளர்ச்சிக்கு கல்முனைத் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினரும் முல்லை மாவட்ட அமைச்சருமான ஜனாப் ஏ. ஆர். மன்சூர் சட்டத்தரணி அவர்கள் எல்லா வகையிலும் அளப்பரிய சேவை செய்து வருகின்றார். அவருக்கு உறுதுணையாக கல்வி இலாகா உத்தியோகத்தர்களும் செயபற்ட்டு வருவது குறிப்பிடத்தக்கது. தற்போது பாடசாலையின் ஆசிரியர் விடுதியில் தற்காலிகமாக இயங்கிவரும் மாணவர் விடுதியை மிக விரைவில் சகல வசதிகளுடனும் கூடிய மாடிக் கட்டிட விடுதியாக அமைத்துத் தருவதாக எமது நாடாளுமன்ற உறுப்பினர் அவர்கள் வாக்களித்துள்ளார்கள்.

எமது கலாசாலை இப்பிரதேசத்திலுள்ள மற்றைய பழம்பெரும் கல்லூரிகளுடன் போட்டியிடும் வகையில், மிகக் குறுகிய காலத்தில் முன்னேறியிருப்பது பெரும் சாதனை என்றே கூறவேண்டும். இதற்குத் தகுந்த எடுத்துக்காட்டாக இப் பாடசாலையின் கடந்த காலங்களின் க. பொ. த. சாதாரண வகுப்புப் பெறுபேறுகளை நோக்கலாம். அத்துடன் க. பொ. த. உயர் வகுப்பிலும் இம்மகா வித்தியாலயத்திலிருந்து தோற்றிய பல மாணவிகள் சித்தியடைந்திருப்பதையும்; சென்ற ஆண்டு உயர் வகுப்புப் பெறுபேறுகளின் அடிப்படையில், இந்த மகா வித்தியாலயத்திலேயே ஆரம்பத்திலிருந்து பயின்றுவந்த மாணவி செல்வி ஏ. எச். ஆரிபா பற் சிகிச்சைப் பிரிவுக்குப் பல்கலைக் கழகத்துக்குத் தெரிவு செய்யப்பட்டுச் சென்றுள்ளதையும் குறிப்பிடலாம். விளையாட்டுப் போட்டிகளிலும், ஏனைய கலாசார நிகழ்ச்சிகள் – போட்டிகளிலும் எமது மாணவியர் பெற்றுள்ள வெற்றிகளும் பெருமைப்படத்தக்கன.

இப்பாடசாலையில் இன்னும் எத்தனையோ தேவைகள் இருக்கின்றன. எதிர்காலத்தில் அத்தேவைகள் பூரணமாக நிறைவேற்றப்பட பொறுப்பு வாய்ந்தவர்களும், இப்பாடசாலையின் நலன் விரும்பிகளும் ஒத்துழைப்பார்கள் என்று மனப்பூர்வமாக நம்புகிறேன். இதன் வளர்ச்சியில் அக்கறை கொண்டவர்கள் அனைவரும் இக்கலாபீடத்தை இலங்கையில் தரம் மிக்க ஒன்றாக விளங்கச் செய்வதற்குப் பிரயத்தனம் செய்யவேண்டுமெனப் பிரார்த்திக்கிறேன்.

**எம். ஸி. ஏ. ஹமீது**

அதிபர்.

# OUR TUTORIAL STAFF

**Seated from Left to Right :**

Mrs. U. N. K. Mohamed, Mrs. P. Samsudeen, Mrs. S. M. Haniffa, Mrs. J. Athambawa, Mrs. R. K. Gnanaratnam, Mrs. A.U.M. Ithrees, Mrs. R. Abusalihu, Mrs. A. Athambawa, Mr. M. C. A. Hameed (Principal), Mr. M. H. Yaqub (Deputy Principal), Mr. Z.M. Aliyar, Mr. M. M. Samsudeen, Mr. S. Yoosuff, Mr. A. M. Ibrahim, Mr. T. V. Ganeshu, Mr. U. L. M. Ismail, Mr. M.Y.L.M.A. Cader, Mr. M. M. Cassim.

**Second Row from Left to Right :**

Mrs. R. U. M. Khan, Mrs. K. Mohideen Pitchai, Mrs. A. Ibralebbe, Mrs. K. M. Yoosuff, Miss M. H. Nasilabeevi, Mrs. S.H. Kariapper. Mrs. F. N. Sheriffdeen, Miss U.L. Marjuna, Miss M.H. Sithy Salma, Miss A. L. Rukiya (L.A), Mrs. H. M. Zarook, Miss M. S. N. Mohideen, Mrs. B. M. Siddeek, Mrs. Z. A. Hameed, Miss V. Velupillai, Mrs. F. A. C. Mohideen, Mrs. N. N. M. Meera sahib, Mrs. S. H. M. M. A. Cader, Miss M. I. Matheena,

**Third Row from Left to Right :**

Mr. A. H. M. Buhary, Mr. M.I.M. Sathik, Mr. P. M. Ismail, Mr. K. Theivendran, Mr. M. Y. Athambawa, Mr. K. L. A. Thasool, Mr. M. I. Sirajudeen. Mr. A. Ibrahim, Mr. Y. Samsudeen, Mr. A. M. Faleel.

**Absentees :**

Miss S. F. A. Raheem, Mrs T. Wisvanathan, Mr. A. A. Rasool, Miss A. M. Sithy Wajeeha, Mrs. T. Thiruchentivel, Miss M.T. Ummu Salma, Miss A. M. Thaiba, Mr. M.Y. Uduman Ali, Mr. M. I. Muzammil, Miss M. Amina, Mr. A. H. A. Bazeer, Miss P. Duraisamy, Miss M. S. Hussaima, Miss M. G. Sithy Ameera, Mr. K. L. Samsudeen, Mr. A. C. Najmudeen, Mrs. F. Aboobucker, Miss S. Velmurugu.



OUR TUTORIAL STAFF

# Principal's Report

The word 'Educate' has its roots in the Latin word 'Educe' which means to educe, to draw out, to develop from within. The best educated man is the one whose mind has been the most highly developed. It was for this purpose Prophet Mohamed (O. W. P. B.) laid heavy emphasis on education for both sexes.

Providing salubrious conditions for effective education is imperative to train up a child in the way he/she should go so that when he / she is old he / she will not depart from it. Also rapid progress of a nation depends largely on providing proper education without any distinction of caste, creed, race or religion. In this regard, it is heartening to note that this Girls Institution in the District, which had a humble beginning had progressed rapidly to serve the children in all parts of Sri-Lanka.

This school had its birth in 1971 due to the untiring efforts of the then M. P. Mr. M. C. Ahamed, then Education Minister Dr. Al-Haj Badi-ud-din Mahmud, Officials of the department and the social-minded men of the area.

The school in 1971 began functioning in 1/4 of an acre of land with 17 teachers, 855 students and two buildings. Although the start was a little cumbersome, thanks to the genuine assistance and support extended to the institution by all concerned which contributed enormously to the present prestigious position of the school with most of its needs fulfilled.

Special mention must be made here of the dedicated efforts made by Mr. A. R. Mansoor M. P. Kalmunai and

District Minister Mullaitivu who during the last five years had contributed immensely to provide enhanced facilities to the school.

Our thanks are also due to the departmental officials for helping us in great measure.

Although the life span of the school is short, it has made giant strides both in education and extra curricular activities.

The school continues to maintain a high percentage of passes in the G. C. E. O/L examination. And this year for the first time a student by the name of Miss A. H. Ariffa entered the University to pursue medical studies in addition to many achieving advanced level status. In the field of sports too the school had done exceptionally well in clinching District championship in Athletics, Netball and Elle on many occasions.

The immediate need of the school is a hostel to accommodate the large number of children seeking admission to the school from other areas. In this connection the M. P. has already initiated action to provide a hostel which will be a reality soon.

While thanking abundantly all concerned for the interest shown, I sincerely pray and hope that this institution will achieve the high ideals for which this institution has been created.

*M. C. A. Hameed*
Principal

# மஹ்மூத் மகளிர் மகா வித்தியாலயத்தின் பத்தாண்டு வளர்ச்சி அறிக்கை

இம்மகா வித்தியாலயத்தில் பத்தாண்டு ஆசிரிய சேவையைப் பூர்த்தி செய்து 1971-ம் ஆண்டு தொடக்கம் பெற்றார் ஆசிரியர் சங்கச் செயலாளராகவும். தொடர்ந்து பாடசாலை அபிவிருத்திச் சபைப் பொருளாளராகவும், செயலாற்றிவரும் நான் இதன் வளர்ச்சி தொடர்பான ஓர் அறிக்கையைச் சமர்ப்பிப்பதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

காயிதே மில்லத் அல்ஹாஜ் கலாநிதி பதியுத்தீன் மஹ்மூத் அவர்கள் 1968-ம் ஆண்டு அகில இலங்கை இஸ்லாமிய சோஷலிச முன்னணி மகாநாட்டை இந்த இடத்தில் கூட்டியபோது, அன்னார் அளித்த வாக்குறுதியின் எதிரொலியே இம் மகா வித்தியாலயமாகும். இதை நினைவுகூரும் பொருட்டே இதற்கு மஹ்மூத் மகளிர் மகா வித்தியாலயம் எனப் பெயரிடப்பட்டது.

இராசவாசல் முதலியார் எம். எஸ். காரியப்பர் அவர்களின் முயற்சியால், அதிபர் மர்ஹூம் யூ. கலந்தர்ஷா அவர்கள் தலைமையில் அல் அமான் மகா வித்தியாலயம் என்ற பெயரில் இயங்கிவந்த இவ்வித்தியாலயம், 1971-ம் ஆண்டு தை மாதம் ஐந்தாம் திகதி முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜனாப் எம். சி. அகமது அவர்களின் முயற்சியால் புனரமைப்புச் செய்யப்பட்டது. அன்று தொடக்கம் அவரது அரவணைப்பினாலும், அதிபர் ஜனாப் எம். சீ. ஏ, ஹமீது அவர்களின் பெரு முயற்சியினாலும் அவ்வப்போதுள்ள ஆசிரியர்கள், கல்வி இலாகா உத்தியோகத்தர்கள், பெற்றோர், நலன்விரும்பிகள் ஆகியோரின் ஒத்துழைப்பினாலும் துரித வளர்ச்சியடைந்தது. 1977-ம் ஆண்டிற்குப் பின்னர் இக்கல்லூரியின் வளர்ச்சியில் தற்போதைய கல்முனை பாராளுமன்ற உறுப்பினரும் முல்லை மாவட்ட அமைச்சருமான ஜனாப் ஏ. ஆர். மன்சூர் அவர்களின் பங்கு குறிப்பிடத்தக்கது.

ஆரம்பத்தில் கால் ஏக்கர் நிலப்பரப்பில் அடங்கி இருந்த இம் மகாவித்தியாலயம், காணித் தட்டுப்பாடான இப்பகுதியில், பல கஷ்டங்களுக்கு மத்தியில் இருபத்தொரு குடியிருப்பாளர்களின் காணிகளைச் சுவீகரித்ததன் மூலம் சுமார் ஐந்து ஏக்கர் விஸ்தீரணத்தைப் பெற்றது.

இம் மகா வித்தியாலயம் ஆரம்பத்தில் 90' × 16', 60' × 20' ஆகிய இரு நிரந்தரக் கட்டிடங்களை மட்டுமே கொண்டிருந்தது. இது தனது பத்து ஆண்டு வளர்ச்சியில் 90' × 20', 100' × 20', 120' × 20' ஆகிய வகுப்பறைக் கட்டிடங்களுடன் 195' × 25' தொடர் மாடி வகுப்பறைக் கட்டிடம், விஞ்ஞான கூடம், வர்த்தக கூடம், தொழில் கூடம், கூட்ட மண்டபம், வாசிகசாலை, பல்சிகிச்சை நிலையம், கல்வி வள நிலையம், ஆசிரியர் விடுதி, தற்காலிக மாணவர் விடுதி ஆகிய

கட்டிடங்களையும் பெற்றது. மேலும் விளையாட்டு மைதானம், குழாய் நீர் வசதி, சுற்றிவர மதில் சுவர் அமைப்பு என்பனவும் வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க அம்சங்களாகும். பெற்றோர் ஆசிரியர் சங்கமும், பாடசாலை அபிவிருத்திச் சபையும் பல ஆயிரக் கணக்கான ரூபாய்களை இப்பாடசாலையின் வளர்ச்சிக்காகச் செலவிட்டுள்ளன.

கல்வி வளர்ச்சியிலும் ஐந்தாம் வகுப்பு வரை ஆரம்பப் பாடசாலையாக இருந்த இப்பாடசாலை பத்து வருட வளர்ச்சியில் க. பொ. த. உயர்தர விஞ்ஞான, கலை, வர்த்தகப் பிரிவு வகுப்புகளுடன் ஏறக்குறைய 1500 மாணவிகளை கொண்டு, இக் கல்வி மாவட்டத்தில் நூறாண்டு வளர்ச்சி பெற்ற பாடசாலைகளுடன் போட்டி போட்டுக் கொண்டு சரிநிகர் சமனாக நிற்கின்றது. ஆசிரியர் தட்டுப்பாடு, உயர்தர விஞ்ஞான கூடம் இல்லாமை போன்ற வசதியீனங்களுக்கு மத்தியில் இங்குள்ள முஸ்லீம் பெண்களும் சர்வகலாசாலைக்கு வைத்தியம், வர்த்தகம் ஆகிய துறைகளில் தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது,

விளையாட்டுத் துறையிலும் இப்பாடசாலை மாணவிகள் இம் மாவட்டத்தில் வெற்றிபெற்று அகில இலங்கை ரீதியிலான போட்டிகளிலும் பலமுறை பங்குபற்றியுள்ளனர். குறுகிய காலத்தில் மாவட்ட வலைப்பந்தாட்ட சம்பியனாகப் பலமுறை தெரிவு செய்யப்பட்டு அகில இலங்கை ரீதியிலான போட்டியிலும் பங்குபற்றியமை குறிப்பிடத்தக்கது.

பேச்சுப் போட்டிகளிலும், மேலும் பல போட்டி நிகழ்ச்சிகளிலும் இப் பாடசாலை மாணவிகள் இம்மாவட்டத்தில் வெற்றியீட்டி அகில இலங்கை ரீதியிலும் வெற்றி பெற்று பரிசில்கள் பெற்றுள்ளனர்.

இப்பாடசாலை வளர்ச்சியில், அன்று தொடக்கம் இன்றுவரை அதிபராகக் கடமையாற்றி வரும் ஜனாப் எம். சீ. ஏ. ஹமீது அவர்களின் பங்கு குறிப்பிடத்தக்கது. இரவு பகல் பாராது தன்னையே இப்பாடசாலைக்காக அர்ப்பணித்துக் கொண்ட ஒருவர் என சுருங்கக் கூறலாம்

இப் பெண்கள் கலைக்கூடம் சகலரினதும் ஆசீர்வாதத்தையும் பெற்று சகல வசதிகளுடனும் மென்மேலும் வளர்ச்சிபெற எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**எம். எம். காசிம்**
**( ஆசிரியர் )**

**மஹ்மூத் மகளிர் மகா வித்தியாலயம்,**
**கல்முனை,**

# பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளரின் அறிக்கை

அஸ்ஸலாமு அலைக்கும்.

கல்முனை மஹ்மூட் பாளிகா மகா வித்தியாலயத்தினதும், இது போன்ற முஸ்லிம் மகளிர் கல்வி நிறுவனங்களினதும் அவசியம், முக்கியத்துவம், முன்னேற்றம், வளர்ச்சி, செம்மையான இயக்கம், சிறந்த பெறுபேறு என்பன இன்றியமையாதன என்பதை எல்லோரும் ஏற்றுக் கொள்வர். காரண காரியங்களைக் கூறவேண்டிய அவசியமில்லை. இந்த உண்மையை விசேடமாக ஏற்று, அதனை நிறைவேற்றுவதற்காக எமது அபிவிருத்திச் சபை தம் வழமையான கடமைகளுள் பல ஆக்க முயற்சிகளைச் செயற்படுத்த, தொடர்புடைய விடயங்களில் ஒத்துழைப்பும், ஆலோசனையும் வழங்கி, வித்தியாலயத்தின் நிழலாக அமைந்து அதன் வளர்ச்சியை அக்கறையுடன் அவதானித்துக் கொண்டும் வருகிறது.

எம் பாளிகாவின் ஆயுட்காலம் பத்தாண்டுகளே. இதனுள் இங்கு பல கட்டடங்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன ; வசதிகள் பல செய்யப்பட்டுள்ளன ; நல்ல நடைமுறைகள் பின்பற்றப்படுகின்றன ; பரீட்சைப் பெறுபேறுகள் திருப்தியாக அமைந்துள்ளன ; கல்விசார் போட்டி முயற்சிகளில் அகில இலங்கை ரீதியில் கூட வெற்றிகள் ஈட்டப்பட்டுள்ளன ; இஸ்லாமிய கலாசாரப் பின்னணியில் எம் யுவதிகள் முன்னேறுகின்றனர் ; இப்பிரதேச முஸ்லிம் கிராமங்களின் முன்னேற்றத்தில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தி ஆக்கத்துக்கு இட்டுச் செல்வதை அண்மைக் காலங்களில் நாம் அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது இச்சிறப்பான நிலைமைகள் இங்கு ஏற்படுதற்கு எமது அபிவிருத்திச் சபை வழங்கிய செயற்பாட்டுப் பங்களிப்பு குறித்து நாம் திருப்தியும் மகிழ்ச்சியும் அடைகின்றோம்.

மேற்கூறிய வளர்ச்சி அல்லது அபிவிருத்திக்கு முதற்காரணமாக இருந்த அம்சம் எமக்கிடையே இருந்த ஒற்றுமை உணர்வே. இப்பாடசாலை அதிபர், ஆசிரியர் குழாம், கல்வி நிருவாகிகள், பாராளுமன்றப் பிரதிநிதிகள், பெற்றோர், நலன் விரும்பிகள், தொடர்புடைய ஏனைய நிருவாகிகள், இப்பிரதேச ஏனைய பாடசாலை நிருவாகத்தினர் ஆகியோர் பரஸ்பர ஒற்றுமை பூண்டு இயங்கியமையே இங்கு இதுவரை ஏற்படுத்தப்பட்ட சாதனைகளுக்கு முக்கிய காரணமாகும். இவர்கள் அனைவருக்கும் பணிவான நன்றியைக் கூறிக்கொள்வதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

ஜனுப். எம். சி. ஏ. ஹமீட் அவர்களை இம் மகா வித்தியாலயம் தம் ஆயுட்காலம் தொடக்கம் இதுவரை அதிபராகப் பெற்றுக் கொண்டமை எம் பெரும் பாக்கியமே. அவரின் இயற்கையான உன்னத சுபாவங்களுடன் கூடிய தலைமையும் வழிகாட்டலும் இவ்வித்தியாலயத்தின் வளர்ச்சிக்கு எவ்வளவோ உதவியுள்ளது. அது குறித்து மிக்க மகிழ்ச்சியடைகின்றோம்; அவருக்கு எமது பணிவான நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். இவ்வித்தியாலயத்தில் கற்பிக்கின்ற ஆசிரியர்கள் கடுமையாக உழைத்து வருவதை நாம் அறிவோம். இப்பிரதேசத்தில் ஏனைய ஆசிரியர்களுக்கு இருப்பதிலும் பார்க்கக் கூடிய பொறுப்பை அவர்கள் மீது ஆண்டவன் சுமத்தி இருக்கின்றான் என்றே கருதுகின்றோம். இவ் வாசிரியர்களுக்கும் எமது நன்றியும் பாராட்டும் உரித்தாகட்டும்.

இம் மகா வித்தியாலயத்தின் வளர்ச்சியில் பங்கெடுத்துக் கொண்ட சாகிரு - பாளிகா அபிவிருத்திச் சபை, பெற்றோர் ஆசிரியர் சங்கம், ஆரம்பப் பாடசாலை அதிபர்கள் - ஆசிரியர்கள் சாகிருக் கல்லூரி மாணவர்கள், பண உதவிகள் நல்கியவர்கள் பொது நலம் விரும்பிகள் மேற்கொண்ட சிரமதான சேவைகள், ஆக்க உதவிகள் என்றும் எம் மனதில் இடம்பெற்றுள்ளன.

கல்முனை மஹ்மூட் பாளிகா வேகமாக வளர்ச்சியடைந்து கொண்டு வருகின்ற ஒரு கலைக்கூடம். ஆனால் இது இன்னும் எவ்வளவோ வளர்ச்சியடைய வேண்டியும் இருக்கின்றது. அந்த நிலைமையை ஏற்படுத்துவதற்காக நாம் எல்லோரும் முன்னர்போல் ஒற்றுமையாகவே இயங்குவோம். எந்தக் கட்டத்திலும் நாம் சோர்ந்து விடாது இருப்போம். இப்பாடசாலைக்குக் குறிப்பாகச் செய்கின்ற சேவை ஏனைய சேவைகளில் இருந்தும் வேறுபடுகின்றது. ஏனெனில் அஃது இஸ்லாமிய இனத்துக்குச் செய்யப்படுகின்ற - முஸ்லிம் பெண்களின் முன்னேற்றத்திற்கு உதவுகின்ற அரும் பணியாக அமைகின்றது. எனவே அப்படியான சந்தர்ப்பங்கள் கிடைக்கப் பெறுகின்ற அனைவரும் இவ் இஸ்லாமிய பாசறையான பாளிகா மகா வித்தியாலயத்துக்கு உதவுவதற்கே முன்னுரிமை வழங்குவோம்.

நன்றி

எம். சி. ஆதம்வாவா

காலத்துக்கேற்ற கோலத்துடன்
கருத்துக்கேற்ற டிசைன்களில்

அரிவையர் விரும்பும் அழகு ஜொலிக்கும் ஆடைகள்
ஆடவர் விரும்பும் சேட்டிங், சூட்டிங்
சிறியோர், பெரியோர் - தைத்த ஆடைகள்
எது வேண்டுமானாலும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள

# "ஜெமினு டெக்ஸ்டைல்ஸ்"

சாய்ந்தமருது பிரதான வீதியில் அமைந்துள்ள புதிய கட்டிடத்தில்

தொலைபேசி: 067-2210

# JEMINA TEXTILES

**Main Street,** **Sainthamaruthu.**

Phone: 067-2210



கண்ணையும் கருத்தையும் கவரும்
வண்ணத் தங்க நகைகளுக்கும்
நவ நாகரீக கைக்கடிகாரங்களுக்கும்
கலப்பற்ற வாசனைத்திரவியங்களுக்கும்

நம்பிக்கை நாணயம் உத்தரவாதத்திற்கும்
சிறந்த ஒரு ஸ்தாபனம்

# நூர்ஜகான் நகை மாளிகை

*64, அம்பாறை வீதி,*
*சம்மாந்துறை.*

ஓடர் நகைகள் குறித்த காலத்தில் உத்தரவாதத்துடன் செய்து தரப்படும்.

# NOORJAHAN GOLD HOUSE

**64, Amparai Road,** **Sammanthurai**

டாக்டர் ஐ. எல். பி. எம். இஸ்மாயில்
(ஆர். எஸ். எம். பி. இலங்கை)

பரம்பரை வைத்தியம் - பதிவு இல. 4041

அலுமினியம், பிளாஸ்டிக் வகைகள்
பால்மா, நூல்வகைகள்
சஞ்சீவி தாழம்பூ தைலம்
தாழம்பூ லக்சாறு களிம்பு
சஞ்சீவி பொன்முஸ்டி பீனிச தைலம்
சர்வ கெரந்தி யெண்ணெய்
காது ரோக நிம்ப எண்ணெய்
பொன்னுங்காணி தைலம்
நில உல்ரிகா தைலம்
சீதள மாற்றத் தைலம்
மன்சிஸ்டிவாத கேசரியெண்ணெய்

இன்னும் அநேக ஒளடதங்களையும், நவநாகரீக சாமான்களையும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள ஒரே ஸ்தாபனம்

"வலீட் றேடர்ஸ்"

சாய்ந்தமருது 3.

எங்களிடம்-
ஏசியா பைக், ஈஸ்டர்ன் பைக், பிளையின் பிஜன் பைக்,
கிங் ரேஸ்டர் பைக், ஹீரோ பைக், ரோயல் பைக்,
பீனிக்ஸ் பைக்,
மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட எல்லாவிதமான பைசிக்கிள்களும்,
அதன் உதிரிப்பாகங்களும், அத்துடன்-

களனி, ஜப்பான், தைவான்

ஆகிய இடங்களில் உற்பத்தி செய்யப்பட்ட எல்லாவிதமான வாகனங்களுக்குரிய
டயர் டியூப்புகளும்

கைத்தறிகளுக்குரிய - நூல், அதன் உபகரணங்கள்,
மீன்பிடி வலைகள், எல்லா வகைகளிலும்

மேலும் - கட்டிடப் பொருட்களும்
அன்றாடத் தேவைக்குரிய பொருட்களையும் மலிவாகப்
பெற்றுக்கொள்ளச் சிறந்த ஒரே ஒரு இடம்

# சீப்பலஸ் நிறுவனம்

மருதமுனை, கல்முனை.

வாடிக்கையாளர் திருப்தியே எங்கள் திருப்தி.

**Textiles**

READYMADE GARMENTS

# YASSEEN SONS

HABERDASHERY
OILMAN GOODS

Main Street,

Kalmunai.

Phone: 2126

WITH BEST COMPLIMENTS

FROM

# FASHION HOUSE

Main Street,

Sainthamaruthu.

கல்முனை
மஹ்மூத் மகளிர் மகா வித்தியாலய
**10**-வது ஆண்டு நிறைவு விழாவில்
நாங்களும்
கலந்து சிறப்பிக்கின்றோம்.

# குட்வின் ஓட்டோ

அச்சகம்

பிரதான வீதி, — கல்முனை.

தொலைபேசி: **067-2027**

WITH BEST COMPLIMENTS

FROM

# COLOMBO TRADERS

MAIN STREET,

KALMUNAI.

கண்ணைக் கவரும் வண்ணச் சாரங்கள்

நிறத்திலும் தரத்திலும் உயர்ந்தவை.

**A. M. I.** சாரங்கள்

டிஸ்கோ, நிறம் மாறுப் பூ, கலர், வெள்ளை, கவர்ச்சிகரமான கோடுகள்

**A. M. I.** சாரங்கள்

கேட்டு வாங்குங்கள் **A. M. I.** சாரங்களை

உரிமையாளர்:

## ஏ. எம். இப்ருஹீம்

பிரதான வீதி, மருதமுனை-1, கல்முனை.

**A. M. IBRAHIM,**
**Main Street,**
**Maruthamunai-1,**
**Kalmunai.**

## காங்கேசன் ரவல்ஸ்

அளிக்கும் தினசரி இரவு, பகல் சொகுசு பஸ் சேவை:
காங்கேசன்துறையிலிருந்து மட்டுநகர் ஊடாக கல்முனை வரை செயலாற்றப் படுகிறது.

புறப்படும் நேரம்:-

| | காலை | மாலை |
| --- | --- | --- |
| காங்கேசன்துறை | 05.30 | 04.00 |
| யாழ்ப்பாணம் | 06.30 | 05.30 |
| கல்முனை | 05.15 | 04.00 |
| மட்டுநர் | 06.30 | 05.45 |

ஆசனம் பதிவு செய்யும் இடங்கள்:-

1. காங்கேசன் ரவல்ஸ், காங்கேசன்துறை. போன்: 34
2. ஸ்ரீ சாயி ஸ்ரோர்ஸ், யாழ்ப்பாணம். போன்: 22660
3. இராசேஸ்வரி ஸ்ரோர், முருகன் ஸ்ரோர், மட்டுநகர். போன்: 2035
4. ராஜா ஸ்ரோர்ஸ், கல்முனை.

**காங்கேசன் ரவல்ஸ்**
**122, பிரதான வீதி,**
**காங்கேசன்துறை.**

**Kankesan Travels**
**122, Main Street,**
**Kankesanthurai.**

## ரீ. எம். முகம்மது இஸ்மாயில்
### அன் கொம்பனி

பிரதான வீதி, சம்மாந்துறை.

சகலவிதமான உழவு இயந்திர உதிரிப்பாகங்கள்
பெயின்ற் வகைகள் போன்றவற்றுக்கு
பிரசித்தி பெற்ற இடம்.

For: TRACTOR SPARE PARTS, PAINTS, ETC.

## T. M. MOHAMED ISMAIL & CO.

**Main Street, Sammanthurai.**

மின்சார உபகரணங்களா?
சைக்கிள் உதிரிப்பாகங்களா?
கட்டிடப் பொருட்களா?
சாப்பு சாமான்களா?

உங்கள் தேவை எதுவாயினும் மொத்தமாகவும் சில்லறையாகவும்
மலிவு விலையில் பெற்றுக்கொள்ள நாடுங்கள்

# ருசானா ட்ரேடர்ஸ்

577, பிரதான வீதி, கல்முனை-7,

**RUZANA TRADERS**

577, MAIN STREET, KALMUNAI-7

# SINGAMS

**PHOTOGRAPHERS**

KALMUNAI.

உங்கள் வாழ்க்கையை என்றும் நினைவு கூர
கறுப்பு வெள்ளைப் படங்களையும் வர்ணப் படங்களையும்
அழகுற குறுகிய காலத்தில் எடுத்துத் தருகிறார்கள்.

## சிங்கம்ஸ் படப்பிடிப்பாளர்கள்

கல்முனை.

WITH BEST COMPLIMENTS

FROM

# KALMUNAI JEWELLERY

**Main Street.**

**KALMUNAI.**

WITH BEST COMPLIMENTS

FROM

# NEW LANKA MEDICALS

**(Opposite to the Base Hospital)**

145, Batticaloa Road,

KALMUNAI.

# ஆக்கங்கள்

- இயற்கை மலரே சிறந்தது
- பொங்கிவரும் புது வெள்ளம்
- அவள் ஒரு குருடி
- வழிகாட்டும் திருக் குர்ஆன்
- ஓர் ஆசை நிராசையானபோது....
- ஊர் சுற்றும் பறவைகளாம்
- கல்விக்குக் கரையில்லை
- தண்டனை

உருவகக் கதை

# இயற்கை மலரே சிறந்தது

செல்வி ஆ. நபிசா வீவி

வரவேற்பறையிலுள்ள பெரிய மேசையை, புதிதாகப் பூச்சாடியினுள் வைக்கப்பட்டிருந்த செயற்கை மலர் அலங்கரித்துக் கொண்டிருந்தது. அழகியல் ரசனை கொண்ட அவ்வீட்டு எஜமானி, இயற்கை அன்னை உருவாக்கிய அலரி மலரை வேறு இடத்திற்கு மாற்றிவிட்டு, அலரி மலர் முன்பு இருந்த இடத்தில் செயற்கை மலரை வைத்திருந்தாள். அதனால் செயற்கை மலருக்குப் பெருமை பிடிபடவில்லை. எவரிடமாவது தனது உயர்வைச் சொல்லித் தீர்க்க வேண்டும் போலிருந்தது. பேச்சுத் துணை தேடி, தன் கண்களைச் சுழற்றி அவ்வறையை நோட்டமிட்டது செயற்கை மலர்.

தனக்குச் சமீபத்தில் ஒரு சிறிய மேசையில் அலரி மலர் தலை கவிழ்ந்த வண்ணம் இருப்பதைக் கண்ணுற்ற செயற்கை மலர், அங்கு நிலவிய மௌனத்தைக் கலைத்துப் பேசத் தொடங்கியது.

''என்ன அலரியாரே, கடும் யோசனையாக் கிடக்கு! எந்தக் கோட்டையைப் பிடிப்பதற்கோ?''

செயற்கை மலரின் இத்திடீர்க் கேள்வியால் ஆத்திரமடைந்த அலரிமலர் ''போதும் நிறுத்து! நீதான் எனது கோட்டையைப் பிடித்துவிட்டாயே! இப்போது என்னிடம் ஏளனக் கதையா அளக்கிறாய்?'' என்றது.

''உனக்கு என்மீது பொறாமை; அதுதான் இவ்வாறு எடுத்தெறிந்து பேசுகிறாய். நீ எவ்வளவு பொறாமைப்பட்டாலும், இனிமேல் நான்தான் இவ்விடத்திற்கு எஜமான்'' என்று தலைக்கனத்துடன் கூறியது செயற்கை மலர்.

''இன்றைய உயர்வு உன் கண்களை மறைக்கிறது. நாளை உனக்குத் தாழ்வு ஏற்பட்டுவிட்டால் என்ன செய்வாய்? நீ உயர்வைக் கண்டு மயங்கி விடாதே!''

''யாருக்குத் தேவை உனது உபதேசம்? எனது உயர்ச்சி உனக்கு எரிச்சலை உண்டு பண்ணுகிறது'' என்று கோபத்தில் ஆவேசமாகப் பதிலளித்தது செயற்கை மலர்.

''எனக்கு உன்மீது எரிச்சலுமில்லை; பொறாமையுமில்லை. நானே இயற்கை மலர். நீயோ செயற்கை மலர். இதனை உணராது கதைக்கிறாயே!'' என்று நகைத்தது அலரி மலர்.

செயற்கை மலர் புன்முறுவலுடன் ''நீ இயற்கை மலராக இருந்தும் என்ன பயன்? எனது இடத்தை உன்னால் நிரப்ப முடியாதிருக்கிறதே! பாவம் உன் நிலை ......?'' என்று பரிகசித்தது.

''எனது நிலை எனக்குத் தெரியும். நீர் அநுதாபப்படத் தேவையில்லை. இப்போது உனக்கு வசந்த காலம். அதே வசந்த காலம் என்னையும் நாடி விரைவில் வரத்தான் போகிறது. அதுவரை உன் அகங்காரத்தை அடக்கிக்கொள்'' என்று பதிலடி கொடுத்தது அலரி மலர்.

''அலரியாரே, நான் இருக்கும் இந்த இடம் மீண்டும் உனக்குக் கிடைக்கும் என்று கனவு காணாதே!'' என்றது செயற்கை மலர்.

''கனவல்ல; அது நனவாய் அமையப் போகிறது. ஏன் தெரியுமா? எனது மணமும் குணமும் அழகும் உன்னிடம் இல்லையே! அதனால் தான் நிச்சயமாய்க் கூறுகிறேன்' என்றது அலரி மலர்.

''நீ என்னைப்போல் வாடா மலராக இருக்கமாட்டாயே! ஒரு சில நாளில் வாடிப் போய்விடுவாய். என்னைப் பார்; நான் எப்போதும் அழகுத் தேவதையாக வாடாது காட்சியளித்துக் கொண்டிருக்கிறேன்'' என்று புகழ்ச்சியுடன் கூறியது செயற்கை மலர்.

''மீண்டும் கூறுகிறேன் கேட்டுக்கொள்! கரங்களால் உருவாக்கப்பட்ட அழகுதான் நீ. நானே இயற்கையில் உருவான அழகு, குணம் எல்லாவற்றையும் கொண்டவள். மனிதர்கள் எனது மணத்தையும் அழகையும் என்றும் விரும்புவார்கள். ஆனால் உன்னைக் கவர்ச்சிக்காக மட்டும் உபயோகப் படுத்தும் மனிதர்கள் நாளடைவில் சலிப் படைந்துவிடுவார்கள். இருந்துதான் பாரேன்'' என்று சொல்லி விட்டது அலரி மலர்.

''அதையும் ஒரு கை பார்த்துவிடுகிறேன்'' என்று கங்கணம் கட்டியது செயற்கை மலர்.

ஓரிரு நாட்கள் ஓடி மறைந்தன. அன்று சில விருந்தினர்கள் அவ்வீட்டிற்கு வந்திருந்தனர். மேசைமீதிருந்த செயற்கை மலரின் அலங்காரம் வந்தவர்களுக்குக் கொஞ்சமும் பிடிக்கவில்லை. அதனை அவர்கள் வெளிப்படையாக அவ்வீட்டு எஜமானியிடம் தெரிவித்தனர். ''உங்கள் தோட்டத்திலுள்ள இயற்கை மலர்களை விட்டுவிட்டு, மணம் குணமில்லாத இதனை இங்கு வைத்திருக்கிறீர்களே! இயற்கை மலராக இருந்தால் எவ்வளவு சிறப்பாயிருக்கும்!''

அடுத்த நாள் அவ்வீட்டு எஜமானி ''மணமில்லாத இந்த மலரை வைத்தது தொந்தரவாய்ப் போய்விட்டது' என்று முணுமுணுத்தவண்ணம் செயற்கை மலரை அகற்றிப் பெட்டியினுள் வைத்து மூடினாள். அந்த இடத்தில் அலரி மலரை வைத்து அழகு பார்த்தாள்.

செயற்கை மலர் தலை கவிழ்ந்தது; இயற்கை மலர் தலை நிமிர்ந்தது. அலரியின் ''கமகம'' என்ற மணம் அவ்விடத்தை நிறைத்தது. ●

## எப்படி விளக்கம் ?

| | | |
|---|---|---|
| வளையல் | - | வீட்டிற்கும் அடகுக் கடைக்கும் இடையே ஓடித்திரியும் தங்கவளையங்கள். |
| இருமல் | - | சிகரெட் பிரியர்கள் இசைக்கும் அபஸ்வரகீதம் |
| கிளப் | - | வசதி படைத்தவர்களின் கேளிக்கைக்குரிய மடம் |
| சூரியன் | - | இருட் குப்பையைக் கூட்டும் ஒளிக்கீற்று விளக்குமாறு. |
| ஓவியம் | - | திரையின் நிர்வாணத்தை மூடும் ஆடை. |

# பொங்கிவரும் புது வெள்ளம்

கதீஜா அன்புமுஹைய்யதீன்

கல்வியினைக் கற்பது முஸ்லிம் பெண்கள்
கட்டாய மில்லையென்று பூட்டி வைத்து
அல்லல்மிகப் படுத்தியதால் அன்று எங்கள்
அன்னையர்கள் அறிவுபெற வழிகளின்றி
பல்லாண்டாய் அவர்பட்ட துயரை இங்கே
பாட்டாக வரைவதற்கு ஏடு போதா
வல்லமைகள் உள்ளவர்கள் பலர் இருந்தும்
வளர்ப்பதற்கு வாய்ப்பின்றி அவதிப்பட்டார்.

அன்றிருந்த சமூகத்தின் அமைப்பால் எங்கள்
அரிவையர்கள் உலகினிலே நடந்த மாற்றம்
ஒன்றையுமே அறியாத படியாய் ஆக்கி
ஊமைகளாய், குருடர்களாய் வாழச் செய்தார்.
என்றுமே அவர்வாழ்வில் புதிய காற்று
எழுந்தவரைத் தழுவுவதற்கு விடவுமில்லை!
ஒன்றுகி எங்களினை பெற்ற தாய்மார்
உதவுவதைக் கூடஅவர் விரும்ப வில்லை.

இப்படியாய் எங்களையும் அடக்கி யாள
எண்ணியவர் கனவுபல கண்டபோதே
ஒப்பில்லா நபிமணிகள் பெண்களுக்கு
உரிமை சில வழங்கியதை அறியாமூடர்
இப்போதும் தாய்க்குலத்தை யடக்கி யாண்டால்
எதிர்காலம் இனியெமக்கு இருண்டே போகும்
தப்புஇனிச் செய்வதனை விட்டால் முஸ்லிம்
தையலர்கள் முன்னேறு வார்கள் என்றார்.


செப்பியஅவ் வார்த்தையினைக் கேட்டு நாங்கள்
சிறைக்கதவை உடைத்தெறிந்து வெளியே வந்தோம்-
இப்போது தான் இந்த உலகிலுள்ள
அதிசயத்தை புதுமைகளை நேரில் கண்டோம் !
எப்போதும் பெண்களினைப் பூட்டிவைக்க
எண்ணுகின்ற ஒருகூட்டம் எதிர்த்து நின்றார்.
அப்பாலே அவர்களினைத் தள்ளிவிட்டு
அணிதிரண்டு முன்னேற நடைபயின்றோம்.

எத்தனையோ ஆண்டுகளின் பின்னே நாங்கள்
இருப்பதனை அப்போது அறிந்து கொண்டோம்
இத்தரையில் பிறஇனத்துப் பெண்கள் எல்லாம்
ஏற்றத்தைப் பெற்றவர்கள் வாழக் கண்டோம்!
நித்திரையில் நாமிருந்தால் எமக்கு வாழ்வு
நிலத்தினிலே இனிக்கிடையா என்றுணர்ந்து
புத்துணர்வு பெற்றெழுந்தோம்! சமூக மாற்றம்
புரிவதற்கு நாம்துணிந்தோம்! வெற்றி கண்டோம் !

எங்களது பாதையிலே இன்னும் இன்னும்
இளையதலை முறையினர்கள் வந்ததாலே
தங்காது தொடர்கிறது பயணம் மேலும்
தடைவரினும் அவைகளினை முறியடிப்போம் !
பொங்கிவரும் புதுவெள்ளம் பின்னே நோக்கிப்
போவதில்லை ! அதுபோல எம்பயணம்
சுங்குலையும் இனிக்கிழித்துச் செல்லும், அங்கு
களித்திருந்து இசைக்குப்ஒலி எங்கும் கேட்கும்.



MAGAZINE COMMITTEE



DISTRICT CHAMPION
NetBall Team Under 17



DISTRICT CHAMPION - ATHLETIC TEAM



SCHOOL BAND SQUAD

குட்டிக் கதை

# அவள் ஒரு குருடி

செல்வி ஏ. நஜீமா
உயர்தர வர்த்தகம்

அவளுக்கு இரண்டு கண்களும் இல்லை, இருந்தும் அதுபற்றி அவள் கவலை கொள்வதாகத் தெரியவில்லை. வாழ்வில் பெரும் பகுதியைக் கடத்திவிட்ட அலுப்பும் முகத்தில் இல்லை. இன்னும் உலகத்தில் வாழ்ந்து பார்க்க வேண்டும் என்ற அவாவுடையவளாகச் சுற்றித்திரிகிறாள்.

தலை பஞ்சாகி, உடல் அவள் வாழ்வைச் சொல்லக்கூடியதாகத் தெரிகிறது. வெள்ளைத் துகிலுடுத்தி, கையில் மூன்று நான்கு கம்பிகள் பொருத்திய தடியோடு துணைக்கு ஒரு குழந்தையையும் அழைத்துக் கொண்டு நடக்கிறாள்.

அவளில் எதுவித கவர்ச்சியும் இல்லை.

அவள் பின்னால் பெருங்கூட்டம்.

ஒவ்வொரு வீடாக ஏறி இறங்குகிறாள். பிள்ளைகள் இனிப்பைச் சுற்றும் எறும்பாக அவளைப் பின்தொடர்கிறார்கள்.

கையிலுள்ள தடியில் பொருத்தியிருக்கும் கம்பிகளை விரலால் மெல்ல மீட்டுகிறாள்.

இசை, கானம் :

அந்தப் பிராந்தியம் முழுவதும் இசை வெள்ளம் பரவுகிறது. எங்கும் நிசப்தம்.

மீண்டும் மீட்டுகிறாள். இசை, கானம்;

அதைக் கேட்பவர்கள் தங்களை மறந்து எங்கோ..., எங்கோ... போய்க்கொண்டிருக்கிறார்கள். மீண்டும் இசையை மீட்டி மெல்லப் பாடுகிறாள்.

'' பசியாலே வாடும் பாவி முகத்தைப் பார்ப்போர் இல்லையா? எம்மைக் கேட்போர் இல்லையா? ஏழை எம்மை ஆதரிக்கும் இரக்கம் இல்லையா ?'' ......

நான் இசையில் ஒன்றிப் போகிறேன். என் கைக்குட்டையில் முடிந்து வைக்கப்பட்டிருந்த நாணயக் குற்றிகள் அவள் குழந்தையின் கையிலுள்ள தகரப் பேணிக்குள் விழுந்து 'கணீர்' என்ற ஓசை எழுப்புகிறது,

இது ஒன்றும் அவளுக்குத் தெரியாது; கவனிப்பதாகவும் தெரியவில்லை. அவள் இசையோடு ஒன்றிப் போய்ப் பாடிக்கொண்டிருக்கிறாள். நான் என்னை மறந்த நிலையில் நிற்கின்றேன்.

என்னைக் கடந்து அடுத்த வீட்டுக்கு (மாளிகைக்கு) சென்று, எவ்வித சலனமுமின்றி இசையை மீட்டி மெல்லப் பாடுகிறாள்.

இதைக் கேட்ட சீமாட்டி வெளியே வந்து '' உன்ட பாட்ட நிப்பாட்டு. பாட்டும் நீயும்... உனக்குப் பிச்ச போடுறதைப் பார்க்க எங்கட சாதிக்குப் போட்டால் நன்மையாவது கிட்டும்......'' என்று கூறி 'படார்' என கதவை இழுத்து மூடி விடுகிறாள்.

இது அவளுக்குக் கேட்டதோ, கேட்கவில்லையோ தெரியாது. அவளில் எதுவித மாறுதலும் தென்படவில்லை. கம்பிகளைத் தடவி இசையை மீட்டிக்கொண்டு அடுத்த வீட்டை நோக்கி நடக்கிறாள்.

அந்த இசை இன்னும் எனக்குக் கேட்டுக் கொண்டே இருக்கிறது. ●

# வழி காட்டும் திருக் குர்ஆன்

சித்தி ஜேர்ஞ கரீம்
க.பொ.த. உயர்தரம்—

அறிவியலில் பொருளியலில் அரசியலில்
வாழ்வியலில் இலக்கியத்தில் வரலாற்றில்
அறவியலில் ஒழுங்கியலில் அருளியலில்
கருத்தாழம் கவிதைநயம் கனிரசம்போல்
பொருத்தமாய் விளங்குகின்ற முறைகளிலே
புவிமுகத்தில் தாயேடாய் இலங்கிநின்று
சிறப்புறு வாழ்வுமுறை செப்பிநிற்கும்
கருவான தீன்மறையே திருக் குர்ஆன் !

வையகத்தில் வாழ்வாங்கு வாழ்வதற்கு
வான்மறையாம் திருக் குர்ஆன் வழிகாட்டி
பொய்யகந்தை கோள், பெருமை யாவும்நீங்கி
மெய்யகத்தை மேம்பட நிரம்பச்செய்து
துய்யவன்தன் ஆட்சியின் மாட்சியினை
துளியளவு ணர்ந்துவாழ மாஆத்மாவும்
செய்கின்ற நற்கருமம் வெற்றியுறத்
தீரமுடன் வழிகாட்டும் திருக் குர் ஆன்!

முன்னோர்கள் வாழ்வுமுறை யொழுக்கங்கூறி
அன்னோர்கள் பின்னழிவு நிலையுங்கூறி
இன்னவகையா யிவ்வுலகில் வாழ்வீரேல்
இருபதி சிறப்பும் பெறுவீரென்று
தன்னெளி சேர்கொள்கை பலகோடி
தாங்குகின்ற வேதமா யுயர்ந்துலகில்
எண்ணரிய புகழினி லிலங்கிநின்று
எழில்சார்ந்த வழிகாட்டும் திருக் குர்ஆன் !

குறுங்கதை

# ஓர் ஆசை நிராசையானபோது ...

செல்வி சபீனு ஏ. அஹமட்

"நீங்க சொன்னதை நான் ஒத்துக்க றன்: ஆனுல் பத்து ஏக்கர் காணி, மகன் ஒப்பீசுக்குப் போக ஒரு கார், ஐம்பதினுயிரம் ரூபா காசி - இவ்வளவும் உங்களால தர முடியுமெண்டால், நம்மட கலியாணப் பேச்சைத் தொடருவம் ; இல்லாட்டி..."

ஏதோ அகங்காரத் தோரணையில் ஒரு குட்டிப் பிரசங்கம் வைத்துவிட்டு வெற்றிலையை ஒருமுறை வாய்க்குள் புரட்டி முண்டிக்கொண்டாள் ருவியத்தும்மா. இப்போதெல்லாம் அவள் மகன் நிசாமுக்குக் கலியாணசீசன்! அதற்குத்தான் அவள் இப்படித் தன் மகனை விலைபேசிக்கொண்டிருக்கிருள்.

நிசாம் ஆயிரம் ரூபாய் சம்பளம் எடுக்கும் ஒரு அரசாங்க எழுதுவினைஞன். ஆனுல் ருவியத்தும்மாவோ "என் மகன் மூவாயிரம் ரூபாய் சம்பளம் எடுக்கிருன். அது மட்டுமா ? இரண்டு ஏக்கர் காணி சொந்தமாக அதுவும் உத்தியோகம் கிடைச்சி ஒரு வருஷத்துக்குள்ள வாங்கி இருக்கான். ஐம்பதினுயிரத்துக்கு ஒத்திவேற பிடிச்சிருக்கான். அப்படிப்பட்ட என் மகனுக்கு நான் கேக்கிறது ஒரு பெரிய சீதனமா......" என்பாள்.

ஓ... ..., ஒரு கிளாக்கிற்கா இவ்வளவு சம்பளம் ? அதெப்படி?...... உத்தியோகம் கிடைச்சி ஒரு வருஷம்கூட ஆகல்ல; எப்படி காணி .. ஒத்தி... – இப்படிப் பல கேள்விக் குறிகளோடு ஊர் வாயில் கை கைவைத்துக் கொண்டபோதும், ருவியத்தும்மா எதற்கும் சளைக்கவில்லை. தன் மகனைப்பற்றிப் புகழ்ந்து கடைச்சரக்குப்போல் விலையைக் கூட்டிக்கொண்டே இருந்தாள்.

நாட்கள் பல நத்தை வேகத்தில் நகர்ந்து கொண்டிருந்தன.

ஒருநாள்.........

ஓ ...., ருவியத்தும்மா தலையில் கை வைத்து அழுதுகொண்டிருந்தாள். அவள் வீட்டின்முன் ஒரு பெருங் கூட்டமே நின்று கொண்டிருந்தது.

"யாரிட்டையோ லஞ்சம் வாங்கி, ஏழைகளின்ர உணவு முத்திரைகளை மோசடி செய்ததாம் ; அதுதான் நிசாமைக் கைது செய்துகிட்டுப் போறுங்க..."

"ம்..., ஏழைகளின்ர நெருப்பல்லவா ; எரியாமலா போயிடும்..."

"எத்தனை நாளைக்குத்தான் அல்லாஹ் பொறுப்பான்......?"

"ஐம்பதினுயிரம், கார், காணி... எல்லாம் போச்சி..."

ஊரெல்லாம் சில உண்மைகள் உலாவிக் கொண்டிருந்தன.

( கலாவும் கற்பனை )

# இரண்டு கவிதைகள்

செல்வி றஹுமா எஸ். அலியார்
11-ம் வகுப்பு - கலை


## ஊர் சுற்றும் பறவைகளாம்

உண்ண உணவின்றி
உடுக்க உடையின்றி
உறங்க வீடின்றி
உயிர்வாழும் எங்களுக்கு
ஊரார் தரும் பட்டம்
ஊர்சுற்றும் பறவைகளாம்

உற்சாகம் வரவுமில்லை
ஊக்கமும் வரவில்லை
உழைக்கவும் தெரியவில்லை
உண்மைகள் புரியவில்லை - இப்படி
உயிர்வாழும் எங்களுக்கு
ஊரார் தரும் பட்டம்
ஊர் சுற்றும் பறவைகளாம்.

## கல்விக்குக் கரையில்லை

கல்வி எனும் கட்டடத்தில்
கடக்கும் படி பலவுண்டு
கண்களால் காண்கின்றோம்
கற்றுத் தேர்ந்தோரை யான்
கண்டிலேன் உலகினிலே
காரணம் என்னவென்றால்
கல்விக்குக் கரையில்லை.




COMMITTEE MEMBERS
School Development Society



MINOR EMPLOYEES





Picked third in the best allround students contest conducted for Kalmunai education District by the education office in 1979.
Also First Girl to be selected from this school for Dental studies.

First Girl to be selected from this institution to follow Assistant Medical Practitioners Course in the Medical Faculty, University of Jaffna.



Prize & Certificate awarded to Miss. Fathima Zahara by Prof. G. Scott at the BMICH for obtaining the 3rd place at the all Island Oratorial Contest 1981 - on Popularization of Science conducted by Sri-Lanka Association for the Advancement of Science.

# தண்டனை

ஹமீத் ஏ. பஷீர்

''சீ நாயே! எத்தனை தரம்டா உனக்குச் சொல்றது - கழுதை! எருமை மாடு மாதிரி வளர்ந்திருக்கான். இந்தப் பண்டிக்குக் கொஞ்சமும் புத்தி இருக்க வேணுமா ........?''

என்னடா இது! தவறுதலாக மிருகக் காட்சிச் சாலேக்குள் நுழைந்து விட்டேனு? அங்குதானே இப்போது கேட்ட பெயர்கள் எல்லாம் உச்சரிக்கப்படுவது வழக்கம். ஒருவேளை ........?

சுற்றிவர ஒருமுறை நோட்டமிட்டேன். சந்தேகமில்லே; நான் அமர்ந்திருப்பது சாதாரண ஓட்டல் ஒன்றில்தான்!

அப்படியானுல் நான் சில விஞடிகளுக்கு முன்பு கேட்ட மிருகங்களின் பெயர்கள் - ?

மிருகங்கள் மிருகக் காட்சிச் சாலேயில் தான் வாழவேண்டும் என்பதில்லே. அவை ஓட்டல்களிலும் வாழலாம். சாதாரண மனிதக் கண்களுக்கு அவற்றை மிருகங்கள் என்று அறிந்துகொள்ளும் சக்தி கிடையாது. ஓட்டல் முதலாளி போன்ற கௌரவம் விரும்பிகள் சிலரின் ஆந்தை விழிகளுக்கு மாத்திரம்தான் அந்த மிருகங்களே அடையாளம் கண்டுகொள்ள முடியும்.

பாவம், பணிப் பையன்!

அவன் இல்லாவிட்டால் முதலாளியால் முன்னேற முடியாதுதான். அதற்காக, அவனைத் திட்டக் கூடாது என்பது நியதியில்லேயே!

பையன் அசையவில்லே; பேசவும் இல்லே. அவனது அசாதாரண மோன நிலே முதலாளிக்குச் சினத்தை ஏற்படுத்தியிருக்க வேண்டும்.

பையன் எதிர்பார்த்திருந்தானே, என்னவோ? அவன் கன்னத்தில் தரமான ஓர் அறை!

கையால் கன்னத்தைத் தடவிக்கொண்டான். கண்களில் நீர்த் துளிகள் பூத்திருக்கின்றன.

முதலாளி இருப்பிடத்திலிருந்து எழுந்து நிற்கிருர். பையனுக்கு அளித்த தண்டனே அவரைத் திருப்திப் படுத்தாமல் இருக்கலாம்.

அவனேக் கையில் பிடித்து இழுத்துக் கொண்டு ''பொயிலரு''க்கு அருகே செல்கிருர்.

''உன்னே இப்படியே விட்டுவிட்டால் நீ உருப்படமாட்டாய்டா. உனக்குச் சரியான பாடம் கற்பித்தால்தான் புத்தி வரும்.''

''பொயிலரு''க்குள் இருந்த வெந்நீர் ''தம்ளர்'' ஒன்றில் நிரப்பப்படுகிறது.

பணிப் பையன் அழுது மன்ருடுகிருன்.

''முதலாளி, இந்தத் தடவை மட்டும் என்னே விட்டுடுங்க முதலாளி. நான் இனிமேல் ஒரு தப்பும் செய்யமாட்டன் முதலாளி.''

வேலேயாளின் வேதனேக் குரல் எஜமானுக்கு வேடிக்கையாக இருக்கும். அது இன்றைய மரபு.

கணப் பொழுதுக்குள் .........

பையனின் முகம் வெந்நீருக்குள் தஞ்சம் புகுந்து கொள்கிறது.

கைகளால் முகத்தைப் பொத்திக் கொண்டு துடித்துப் புரண்டு அலறுகிறான் பையன்.

''கள்ள நாயே, என்னடா பெரிசா ஒப்பாரி வைக்கிறே!'' சிறுவனைக் காலால் உதைத்துத் தள்ளிவிட்டு நடக்கிறார் முதலாளி வெற்றுத் தம்ளர் ஒரு மூலையில் போய் விழுகிறது.

மிருகங்களுக்கு ஐந்து அறிவுதான் இருக்கும். மனிதனும் மிருகமாக மாறலாம் — பகுத்தறிவை இழந்துவிடும்போது.

பையன் முதலாளிக்கு மிருகமாகத் தோன்றலாம். ஒரு மிருகம் ஒரு மனிதனைத் தன்னைப்போல் ஒரு மிருகமாகத்தான் கருதும். அப்படியானால் பையனின் முதலாளி ........?

அவர் ஒரு மிருகமா? அல்லது மிருகத்தின் செயல்கள் அவரிடம் இருக்கின்றனவா?

இது பகல் உணவுக்கான வேளை. மண்டையைப் பிளக்கும் உச்சி வெய்யிலில் அரை மைல் நடந்து வந்திருந்த களைப்பு எனக்கு ஓட்டலுக்குள் நுழையும்போது வயிற்றைப் பிறாண்டும் பசி இருந்தது உண்மைதான். ஆனால் இப்போது ........?

பணிப் பையனின் பரிதாப நிலையைப் பார்த்ததும் பசி மறைந்துவிட்டது. மேசையில் உணவு வைக்கப்பட்டிருக்கிறதே என்பதற்காக அதில் சிறிதளவை வாய் அசை போடுகிறது.

பையனுக்குப் பதிமூன்று வயது இருக்கலாம். அவனுக்கு ஏன் இத்தகைய கொடுந் தண்டனை? அவன் தப்புச் செய்திருப்பான். அதற்காக, முகத்தில் வெந்நீர் ஊற்ற வேண்டும் என்று எந்தச் சட்டம் கூறுகிறது?

யாரோ இன்னுமொரு பணியாள் பையனைக் கிணற்றடிக்கு அழைத்துச் செல்கிறான் விம்மலும் அழுகையும் இன்னும் ஓயவில்லை.

யார் இந்தப் பையன்? இவ்வளவு கொடுமைக்கிடையிலும் இவன் இந்த ஓட்டலில் வேலை செய்ய வேண்டிய காரணம்?

அவன் ஓர் ஏழைச் சிறுவனாக இருக்க வேண்டும்; அல்லது அவனிடம் மனித இயல்புகள் வேரூன்றி இருக்க வேண்டும்.

சிந்தனையினூடே ஓட்டலை விட்டு எனது அறையை நோக்கி நடக்கிறேன். எனக்கு இந்தக் கிராம வாழ்க்கையில் இது இரண்டாவது நாள்.

பயிற்சியை முடித்துக் கலாசாலையிலிருந்து வெளியேறிய என்னை இந்தக் கிராமத்துப் பாடசாலையில் கடமையேற்கும்படி பணித்திருந்தார்கள்.

முதல் நாள் கிராமத்துக்குள் அடியெடுத்து வைத்திருந்த எனக்கு மூன்று நேர உணவு அளிக்க முன் வந்தது இந்த ஓட்டல்தான்.

ஓட்டலில் எனது இரண்டாவது நாள் அநுபவமே பயங்கரமாக இருக்கிறது.

புது இடத்தில், நேரத்தின் பெரும் பகுதி சிந்தனையிலேயே கழிகிறது.

மாலை வேளை. மணி சுமார் நான்கிருக்கும்.

தேநீர் அருந்துவதற்காக ஓட்டலை நோக்கி நடக்கிறேன். சற்றுத் தொலைவில் ..........?

அங்கு சென்றுகொண்டிருப்பது யார்? ஓட்டலின் பணிப் பையன்தான்;

ஏதோ ஒரு வேகம் உந்த, கைகளைத் தட்டி அவனை நிறுத்துகிறேன். அவனுடைய கண்கள் சிவந்திருக்கின்றன. புருவங்கள் வீங்கிப் பெரிதாகத் தோற்றமளிக்கின்றன. சிவந்த முகம் சற்றுக் கறுத்துக் காணப்படுகிறது.

அவனை நெருங்கியதும், இருவருமாக நடக்கிறோம்.

" எங்கு போய்விட்டு வருகிறாய் தம்பி"
" ஆஸ்பத்திரிக்கு !"

முகத்தில் தாங்க முடியாத வேதனை இருந்திருக்கும். கொதிநீரைக் கொட்டுவதற்கு முகத்தைத் தவிர உடம்பில் வேறு இடமில்லையா ?

" மத்தியானம் என்ன தப்புச் செய்தாய் ?" கேட்க மனம் வரவில்லைத்தான். இருந்தாலும் கேட்டுவிட்டேன் .

அவனது முகத்தில் சோகத்தின் சாயலோடு அவமானத்தின் அறிகுறிகளும் படர்கின்றன. தான் அவமதிக்கப்பட்டதை இன்னொருவர் பார்த்துவிட்டார் என்பதோ அல்லது சுட்டிக் காட்டுகிறார் என்பதோ அவனது முக மாற்றத்துக்குக் காரணமாயிருக்கலாம் .

பேசாமல் தலையைக் குனிந்து கொள்கிறான் .

" வெட்கப்படாமல் சொல்லப்பா "
" ஐம்பது சதக் காசைக் களவெடுத்திட்டேன் ."

" எதுக்காக ?"

"அம்மாவுக்குக் கடிதம் போடணும் "
"அதுக்குக் களவெடுக்கிறதா ? காசைக் கேட்டு வாங்கியிருக்கலாமே !"

அவன் இலேசாகச் சிரித்தான் . உள்ளாக் குமுறலால் எழுந்த விரக்திச் சிரிப்பு அது .

" கேட்டதும் தந்திருந்தா நான் ஏன் களவெடுக்கப்போகிறேன் ?"

" அப்போ, உனக்கு இங்கே சம்பளம் கொடுக்கிறதில்லையா ?"

" அடியும் உதையும் பொயிலர்த் தண்ணி ஊத்திறதும்தான் சார் சம்பளம். வயித்தக் காப்பாத்திக்கிறதுக்காக இதையெல்லாம் தாங்கிக்கிட்டு வேலை செய்ய வேண்டியிருக்கு . வீட்டுக்குக் கடிதம் எழுதப் போறேன்னு சொன்னா உதைதான் கிடைக்கும் ."

பையனின் பேச்சிலும் தோற்றத்திலும் பல விஷயங்கள் ஊகிக்கக் கூடியதாய் இருக்கின்றன .

அவன் கொஞ்சமாவது படித்திருக்க வேண்டும் . அவனைப் பெற்றவளும் இருக்கிறாள் . அவனுக்கு வீடும் இருக்கிறது . ஆனால் அந்த வீட்டுக்குப் பையனால் இங்கிருந்து நடந்து செல்ல முடியாது . தூரத்தில் ஓர் இடம் போலும் .

சம்பளமே இல்லாமல் வேலை செய்கிறான் பையன், ஏன் ? ஒரு சாண் வயிற்றைக் கழுவுவதற்காக : அவனது ஜீரண உறுப்புக்களுக்கு உணவு இங்கு கிடைக்கிறது . அதோடு உடல் உறுப்புக்களுக்கும் ' சாப்பாடு ' கிடைக்கிறது .

அவனைப் பற்றிய தகவல்களை அறிய என் மனத்துக்கு ஓர் அலாதியான ஆவல்.

" உனக்குத் தாய் தந்தை இருக்காங்களா ?"
" ஆமாம்"

" அவங்க என்ன செய்யிறாங்க ?"

" அப்பா பேங்க் மனேஜராயிருக்கார். அம்மா வீட்டிலேதான் ."

வியப்பைத் தாங்க முடியாமல் " பேங்க் மனேஜரா ?" என்று திருப்பிக் கேட்கிறேன் .

அவன் நிதானமாக ' ஆமாம் ' என்னும் தோரணையில் தலையசைக்கிறான் .

"அப்படியானா நீ ஏன் தம்பி இங்கே கிடந்து அவதிப்படுகிறாய்? "

" என் புத்தி போன போக்கு சார் ! நான் அதிகமா ஊர் சுற்றித் திரிகிறேன் என்று அப்பா கொஞ்சம் கடுமையாக ஏசிட்டார். அதுக்காகக் கோபப்பட்டுக்கிட்டுப் பத்து ரூபாக் காசோட ஓடி வந்திட்டேன். இங்கே வந்ததும் காசும் முடிஞ்சுபோச்சு. பசி தாங்க முடியாம இந்த ஓட்டல்லே வந்து வேலைக்குச் சேர்ந்திட்டன்.

''எவ்வளவு காலமா இங்கே நிற்கிருய்''
''ரெண்டு யாசம் இருக்கும்''

எனக்கு எல்லாமே புரிந்துவிட்டது போன்றிருக்கிறது. ஓட்டலுக்குள் அமைதியாகப் போய் அமர்ந்து கொள்கிறேன். பையன் குசினிப் பக்கம் போகிருன்.

உலகம் விசித்திரமானது. வாழ்க்கையில் பெற்றுக் கொள்ளும் அனுபவங்கள் எமது தவறுகளைத் திருத்திக் கொள்வதற்கும் உதவுவது உண்மைதான்.

பெற்ருேர், பிள்ளைகளுக்குச் சுடுசொற்களால் ஏசுகிருர்கள். சிலர் தடிகொண்டும் அடிக்கிருர்கள்.

இவை எல்லாம் எதற்காக?

பிள்ளைமேல் ஏற்பட்ட வெறுப்பிலா?

நிச்சயமாக அப்படி இருக்க முடியாது.

திருந்தக்கூடிய பருவத்தில் பிள்ளைகளைத் திருத்துவது பெற்றவர்களின் கடமை. அதற்காகத்தான் அவர்கள் தண்டனை வழங்குகிருர்கள். தண்டனைகளும் பிள்ளைகளின் நல்வாழ்வுக்கு வழி வகுக்கத்தான் செய்கின்றன.

தந்தையின் சுடு சொற்களைப் பெருந்தண்டனையாகக் கருதிக்கொண்டு வீட்டை விட்டு ஓடி வந்திருக்கிருன் பையன். ஆனல் இங்கு அவன் நிலையோ.....?

அக்கரை மாட்டுக்கு இக்கரை பச்சை தான்.

தன் தவறைப் பையன் இப்போது நன்ருக உணர்ந்து விட்டான். விபரம் புரியாமல் அவன் செய்த தவருன செயலுக்கு உலகம் நல்லதொரு பாடம் கற்பித்திருக்கிறது. பெற்றவாகளின் பெருந்தன்மை அவனுக்கு நன்கு விளங்கிவிட்டது. தன் வீட்டுக்குச் சென்ருல், இனிமேல் அவன் பெற்ருேரைப் பிரியவே மாட்டான்.

பையனின் வீட்டுக்கு நானே கடிதம் எழுதினுல் என்ன என்று யோசனை செய்கிறேன். அது நல்ல செயல்தான். கட்டாயம் நான் கடிதம் எழுதித்தான் ஆகவேண்டும்.

குசினிப் பக்கம் பார்க்கிறேன். முகத்தில் எண்ணெய் தடவிக்கொண்டிருக்கிருன் பையன். முதலாளி வெளியே போயிருக்கிருர்.

நான் பையனை அழைக்கிறேன். – அவனுடைய தந்தையின் விலாசத்தைப் பெறுவதற்காக,

(யாவும் கற்பனை)

## நானறிந்த நல்லதிபர்

மு முச்சங்கத் தமிழ் ஓசை முழுமையாய் நின் றொலிக்க
எச்சங்கத்திலு மணிசேர்த்து எழிலுருவம்தான் அமைத்தாய்

கா காலத்தைத் தானுணர்ந்து காரியமனைத்தையுமே திருக்
கோலத்தைக் கொண்டே கோலோச்சும் செயல்வீரன்

அ அன்பிற்கு முண்டோ அடைக்குந் தாழ் என அறிந்து
இன்ப முகம் எழிலோட இணங்கி நிற்கும் நல்லாசான்.

ஹ 'ஹக்'கனருள் மிக்கதாய் 'ஹமீது' தனைப் பெற்றுத்திறம்
மிக்க குணமுடையோய் நீ யோர் மேன்மகனே!

மீ மீளாய்வு செய்து முறுவலித்துத் தேறுெழுக
நாளான் பிரச்சினையை நயமுடனே தீர்த்துவைப்பாய்.

து துறைபோன தூய உளத் தேரேறிக் காலமெலாம்
கறையகற்றும் கலையகத்தை காத்து நிற்கும் நல்லதிபர்.

அகமதுவும் மஹ்மூதும் அணிசேர்ந்த பாலிகாவை
தகமையது மிக்கதோர் கலைக்கோயிலாக்கினையே
நீ நானறிந்த நல்லதிபர்.

அபுல்கலாம் ஐ. எம். எஸ். எம். பளீல் மௌலானு ஜே. பி.
நிர்வாகச் செயலாளர்,
கிழக்கிலங்கை அரபுக் கல்லூரி.

## M. C. A. HAMEED
**At A Glance**

M MAN OF INTEGRITY
C CULTURED MUSLIM GENTLEMAN (SERVANT)
A ABLE SCHOOL ADMINISTRATOR
H HARD WORKING EDUCATIONIST
A AMIABLE PERSONALITY
M MUCH LOVED SOCIAL THINKER (WORKER)
E EDUCATIONAL REFORMER
E ENERGETIC SOCIAL WORKER
D DUTY CONSCIOUS TEACHER

by **Abulkalam I. M. S. M. Faleel Moulana J. P.**
Administrative Secretary,
East Ceylon Arabic College.

சொய்சையே கேளுங்கள்:

பாடசாலைப் புத்தகங்கள்,
உபகரணங்கள்,
அன்பளிப்புப் பொருட்கள்,
மற்றும் தேவைகளுக்கு—

**சொய்ஸ் பலஸ்-புத்தக விற்பனையாளர்**

67, பிரதான வீதி, கல்முனை.

**CHOICE PALACE & BOOK SELLER**

**67, Main Street, KALMUNAI.**

**நஹ்வியா ரேடர்ஸ்**

அம்பாரை வீதி,
சம்மாந்துறை.

சகலவிதமான சில்லறைப் பொருட்களுக்கும் பிரசித்தி பெற்ற இடம்.

**NAHVIYA TRADERS**

**Ampara Road,**
**Sammanthurai.**

**ஜெம் ஷைன்**
**என்டர்பிரைசஸ்**

78, பஸார் வீதி, சம்மாந்துறை.

மணமகளுக்குத் தேவையான கூறைச் சாறிகள், பரிசுப் பொருட்கள், மற்றும் தரமான சேட்டிங், சூட்டிங் வகைகளைச் சகாயமான விலையில் பெற்றுக் கொள்ள ஒருமுறை இங்கு விஜயம் செய்து பாருங்கள்.

**GEMSHINE ENTERPRISES**
Dealers in: Textiles & Fancy Goods

**78, Bazaar Street,**
**Sammanthurai.**



At the Cpening of the Assembly Hall.



Teachers actively involved in preparing Rice to celebrate Prophet Mohamed's (O.W.P.B ) Birth Anniversary.



Picture Taken after Laying the Foundation Stone for the Assembly Hall.



Drill Display at the Annual Inter House Athletic Meet.

# சென்றல் ஹாட்வெயார் ஸ்டோர்ஸ்

பிரதான வீதி,
சாய்ந்தமருது.

கட்டிட இரும்புச் சாமான்கள்,
சைக்கிள் உபகரணங்கள்
பலரக பெயின்ட் வகைகள்,
எஸ்லோன் பிட்டிங்

மற்றும் பலவகையான பொருட்களும்
மொத்தமாகவும் சில்லறையாகவும் கிடைக்கும்

## CENTRAL HARDWARE STORES

MAIN STREET,
SAINTHAMARUTHU.



# JARINA HARDWARE

Dealers in: General Hardware, Paints, Building Materials and Electrical Goods.

Agent for: C I. C. Paints and Elephant Brand Asbestes Corrugated Sheets.

126, Main Street,

KALMUNAI.

T'Phone: 067-2079

With best Compliments

from

**BABUJEE'S COOL SPOT**

43, Main Street,

Kalmunai. E. P.

T'Phone: 067-2342

WITH BEST COMPLIMENTS

FROM

**UNIVERSAL AGRO CHEMICALS**

Central Road,

SAMMANTHURAI 4

**யூனிவேசல் எக்ரோ கெமிக்கல்ஸ்**

சென்ரல் ரோட்,

சம்மாந்துறை - 4

## சபா அரிசி ஆலை

சின்னத்தம்பி வீதி,

கல்முனை-3.

எங்களிடம்

தரமான உள்நாட்டு அரிசி வகைகள்
சகாய விலையில் மொத்தமாகப்
பெற்றுக்கொள் இன்றே நாடுங்கள்.

## SAFA RICE MILL

SINNATHAMBY ROAD,

KALMUNAI-3.

## SALIM MOTOR STORES

DEALER IN SPARE PARTS

71, Main Street,
Kalmunai.

உங்கள் உதிரிப்பாகத் தேவைக்கு
இன்றே நாடுங்கள்

# S. M. S.

## சாலிம் மோட்டோர் ஸ்டோர்ஸ்

71, பிரதான வீதி,
கல்முனை.

# KALMUNAI MOTOR STORES

**Dealers in:** Motor Spares & Batteries, etc.

**100, Main Street,**
**Kalmunai.**

Phone: **2255**

தங்கள் உதிரிப்பாகத் தேவைக்கு இன்றே நாடுங்கள்

# K. M. S.

## கல்முனை மோட்டோர் ஸ்டோர்ஸ்

**100, பிரதான வீதி,**
**கல்முனை.** **போன்: 067- 2255**



# CASSIM SONS

**Dealers in: Agro Chemicals & Fertilizers.**

MAIN STREET,
NINTAVUR.

விவசாயிகளே!

உங்களுக்குத் தேவையான களை கொல்லிகள், கிருமிநாசினிகள், உரவகைகள், தெளி கருவிகள் போன்றவற்றை மலிவான விலையில் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள நிந்தவூரில் ஒரேயொரு ஸ்தாபனம்

# காசீம் சன்ஸ்

**பிரதான வீதி,** **நிந்தவூர்-3**

With the best Compliments
from

# ROSHAN TRADE CENTRE

**MAIN STREET,
SANITHAMARUTHU.**

DEALERS IN:

- ELECTRICAL GOODS
- GIFT ITEMS
- STATIONERIES
- SLON PIPES & ASSESSORIES
- FANCY GOODS
- CASSETTES
- FANS
- CLOCKS
- OINTMENTS ETC.

**பத்தாவது ஆண்டு பூர்த்தி விழாவைக் கொண்டாடும்
கல்முனை மஹ்மூத் மகளிர் மகா வித்தியாலயத்திற்கு**

**எமது வாழ்த்துக்கள்**

# இளம்பிறை அச்சகம்

**பிரதான வீதி, மருதமுனை - 1,
கல்முனை.**

திருமண வைபவங்களுக்குத் தேவையான
பியர் மணிப்புரி, காஞ்சிபுரம் போன்ற கூறைப்புடைவைகள்
ஆடவருக்கான சேட்டிங், சூட்டிங்
சிறுவர், சிறுமியருக்கான ரெடிமேட் ஆடைகள்
போன்றவற்றைக் குறைந்த விலையில் பெற்றுக்கொள்வதற்குச்
சிறந்த இடம்

# எவரெஸ்ட் டெக்ஸ்டைல்ஸ்

75, பிரதான வீதி,
கல்முனை.

**EVEREST TEXTILES**

75, Main Street, Kalmunai.

இல்லத்தரசிகளின் இதயம் கவரும் வண்ணத்தில்
இன்றைய நாகரீகத்துக்கு ஏற்ற தரமான
டிசைன் ஆடைகளைத் தெரிவு செய்ய
கல்முனையில் சிறந்த இடம்

# சொப்பிங் சென்டர்

20, பிரதான வீதி, கல்முனை.

VISIT FOR.......

QUALITY TEXTILES

**SHOPPING CENTRE**

20, MAIN STREET, KALMUNAI.

"றிஸான்ஸ்"

சகலவிதமான

❉ திருக் குர்ஆன் வகைகள்

❉ இஸ்லாமிய நூல்கள்

❉ மாணவர்களுக்குரிய உபகரணங்கள்

❉ அழகு சாதனப் பொருட்கள்

❉ பாதணிகள்

❉ பரிசுப்பொருட்கள்

❉ தையல் உபகரணங்கள்

ஆகியவற்றை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற சாய்ந்தமருதில் ஒரே ஸ்தாபனம்

# றிஸான்ஸ்

பிரதான வீதி, சாய்ந்தமருது-3

**"RIZANS"** Main Street Sainthamaruthu-3

வாடிக்கையாளர்களே ...

உங்களுக்குத் தேவையான கேக், பணிஸ் போன்ற மாப்பண்டங்களை சிறந்த முறையில் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ள இன்றே ஒருமுறை விஜயம் செய்து பாருங்கள்

# பர்ஸானா பேக்கரி

திருமண, கத்னா போன்ற விசேட வைபவங்களுக்குத் தேவையான கேக்குகள் சிறந்த முறையில் குறைந்த விலையில் உரிய நேரத்தில் செய்து கொடுக்கப்படும்.

**பர்ஸானா பேக்கரி**

**பிரதான வீதி,**

**கல்முனைக்குடி-4, கல்முனை.**

**FARZANA BAKERY,** KALMUNAI.

# Manpower & Consultancy Services Ltd.

2nd FLOOR, 54 - HAMPDEN LANE,
WELLAWATTE, SRI LANKA.
GOVT. REGISTERED LABOUR LICENCE NO. 67.

Offer it's best wishes & Greetings
on the occasion of the
10th Anniversary Celebrations of
Kalmunai Mahmud Balika Maha Vidyalaya.

Accredited Agents in Sri Lanka for the Prestigious
Saudi Arabian Principals.

Al-Oasis Trading & Contracting Est:
A-Zamil Refrigeration Industries
Zamil Aluminium Industries
Zamil Marine & Catering Services
A. H. Zamil & Sons Group of Companies

We have No Sub-Agents Anywhere in Sri Lanka.

We are proud to be associated with the Government's
efforts of finding Employment for Sri Lankans
in the Middle-East Countries

For information please Contact:-

O. M. SALEEM
Attorney - At-Law & Notary Public
Managing Director.

Telephone: 580804

Telex: 21710 unikey Cey.
21760 Ceytra Ce.

# சிந்தனைகள்

- O புதுகுஷ்ஷாம் பாறூக்கிய்யாக் காண்டம்
- O கணிதமும் அதன் ஆற்றலும்
- O மனித உரிமைகள்
- O இஸ்லாத்தில் பெண்ணுரிமை
- O உணவைப் பாதுகாத்தலும் பதனிடலும்

# புதுகுஷ்ஷாம
# பாறூக்கிய்யாக் காண்டம்

புலவர்மணி அல்ஹாஜ் ஆ. மு ஷரிபுத்தீன்

இன்று சிரியா எனப்படும் ஷாம் தேசத்தை முஸ்லிம்கள் வெற்றி கொண்ட சம்பவத்தைக் கூறும் நூல் புதுகுஷ்ஷாம் எனப்படும் காவியமாகும். அதனைக் காயற்பட்டினம் செய்கப்துல் காதிறு நெய்னார் லெவ்வை ஆலிம் புலவர் இயற்றினார்.

பெருமானார் (ஸல்) அவர்கள் இஸ்லாமியப் பிரசாரம் செய்ய ஆரம்பித்த காலத்தில் அண்மையிலுள்ள நாடுகளை ஆண்ட மன்னர்களுக்கெல்லாம் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளுமாறு தூதுவர் மூலம் ஓலை போக்கினார்கள். பெருமானாரின் வருகை பற்றியும் அவர்களின் இஸ்லாமியப் பிரசாரம் குறித்தும் யூத, கிறிஸ்தவ மதங்கள் மூலம் முன்னதாகவே தெரிந்து கொண்டிருந்தும் கூட, அவர்களில் பலர் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ள முன்வரவில்லை. அவர்களில் ஷாம் தேசத்துச் சக்கரவர்த்தியான ஹிறக்லும் ஒருவன். அவன் பெருமானாரின் ஓலையைப் பெற்றதும் தனது பிரதானிகளைக் கூட்டி அதனை அறிவித்தான். பின்னால் நடக்கப் போவது குறித்து தான் முன்னதாகவே வேதங்கள் மூலம் தெரிந்து கொண்டிருப்பவற்றை விளக்கமாகக் கூறினான். மன்னன் இஸ்லாத்தை ஏற்றுக்கொள்ள விரும்பிக் கொண்டிருக்கிறான் எனக் கருதிய பிரதானிகள் சினங்கொண்டு மன்னனைக் கொல்லவும் துணிந்துவிட்டனர். அதனைத் தனது மதியூகத்தினால் தெரிந்துகொண்ட மன்னன், ''நான் உங்கள் மன உறுதியைத் தெரிந்து கொள்வதற்காகவே இவ்வாறு கூறினேன்'' எனக்கூறிச் சமாளித்துக்கொண்டான்.

ஷாம் தேசம் பல நகரங்களை உள்ளடக்கியது. நகரத்திற்கொரு சிற்றரசன் இருந்து ஆட்சி புரிந்து வந்தான் ஹிறக்ல் சக்கரவர்த்தியாக அந்தாகியா என்னும் நகரத்திலிருந்து ஆட்சி புரிந்தான். பெருமானார் அல்லாஹ்வின் ஆணைப்படி ஷாம் தேசத்தின் மீது படையெடுத்து, அதனைக் கைப்பற்றவும், இஸ்லாமிய ஆட்சிக்குட்படுத்தவும் படையெடுப்பை ஆரம்பித்து வைத்தார்கள். பெருமானார் காலமானதும் கலீபாப் பதவி ஏற்ற அபூபக்கர் சித்தீக் (ரலி) அவர்களின் காலத்தில் காலித் இப்னு வலீத் (ரலி) தளகர்த்தராயிருந்து படையை நடத்திச் சென்றார். அவரால் திமஸ்க் நகரம் கைப்பற்றப்பட்ட அன்றே கலீபா அபூபக்கர் (ரலி) தூலகதியடைந்தார்கள். ஸஹாபாக்கள் ஒன்று கூடி, உமர்கத்தாப் (ரலி) அவர்களைக் கலீபாப் பதவிக்கு நியமித்து பைஅத்து செய்து கொண்டார்கள். இது படைக்களத்தில் இருந்தவர்களுக்குத்தெரியாது.

திமிஷக் நகர் வெற்றி குறித்து தளபதி காலிது கலீபா அவர்களுக்குக் கடித மூலம் அறிவித்தார். கடிதத்தைக் கொணர்ந்த தூதுவர் மதீனாவை அடைந்து, அபூபக்கர் (ரலி) காலாகதி அடைந்ததை அறிந்து கலீபா உமர்கத்தாப் அவர்களிடம் கடிதத்தைக் கொடுத்தார். கலீபர் அவர்கள் மகிழ்ச்சியடைந்து போர்க்களத்தில் இருந்த அபூ உபைதா (ரலி) அவர்களுக்குக் கடிதம் எழுதி, வந்வர்களிடம் கொடுத்தனுப்பினார்கள். அதில் அபூ உபைதாவைத் தளபதியாக நியமித்திருப்பதாகவும் குறிப்பிட்டிருந்தார்கள். அபூஉபைதர் அதனை யாருக்கும் கூறாது

With best Compliments

from

# MARINA RICE MILL

MAIN STREET, KALMUNAI.

PHONE: 067-2052

மௌனமாக இருந்துவிட்டார். கலீபாவுக்கு அனுப்பிய கடிதத்துக்குப் பதில் கிடைக்காததனால் காலிது கலீபா அபூபக்கர் அவர்களுக்கு மீண்டும் கடிதம் எழுதி அனுப்பினார். உமர்கத்தாப் (ரலி) அவர்கள் தாம் அபூ உபைதாவுக்கு அனுப்பிய கடிதத்தை அவர் வெட்கத்தினால் பிரஸ்தாபிக்காமல் மறைத்துக்கொண்டார் எனத் தெரிந்து, மீண்டும் அபூ உபைதாவின் நியமனத்தை உறுதிப்படுத்தி எழுதியதோடு, தனக்காக அங்குள்ளாரிடம் பைஅத் பெற மற்றொருவரையும் கூட்டி அனுப்பிவைத்தார்கள். கலீபாவின் கட்டளைப்படி அபூ உபைதா தளபதிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டார். காலிது தனது பதவியை மனதார விட்டுக் கொடுத்து பெருந்தன்மையோடு போரில் ஈடுபட்டார்.

கட்டாயத்தின் பேரிலன்றி தாமாகவே விரும்பிப் போருக்குச் செல்ல அநுமதிக்குமாறு பல்வேறு இடங்களிலிருந்தும் முஸ்லீம்கள் கலீபா அவர்களிடம் வந்து விண்ணப்பித்துக் கொண்டிருந்தார்கள். அவர்களுக்கெல்லாம் ஆயுதங்கள், வாகனங்கள், உணவுப் பொருள்கள் கொடுத்து படை திரட்டிப் போர்க்களத்துக்கு அனுப்பிக் கொண்டிருந்தார்கள். அனுப்பும்போது வீரர்களுக்கு நல்லுபதேசங்கள் கூறி அனுப்பிக் கொண்டிருந்தார்கள். நீங்கள் கீழ்ப்படிவும் நல்லொழுக்கமுள்ளவர்களாகவும் வாக்குறுதி மீறுதவர்களாகவும் இருக்க வேண்டும். எதிர்த்தவர்களையன்றி, பெண்கள், பிள்ளைகள், நோயாளர், வயோதிபர், வேதியர்கள் எவர்களையும் சொல்லக்கூடாது. கனிதரும் மரங்களை வெட்டக்கூடாது. — இவை முதலான அறப்போதனைகளைக் கூறி அனுப்பினார்கள்.

படை நடத்திச் சென்றவர்கள் முதலில் ஒரு நகரத்தை முற்றுகை இடுவர். அப்பால் நகரத் தலைவனுக்கு ஒரு அறிவித்தல் கொடுப்பார்கள். அதில் நீங்கள் இஸ்லாத்தை ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும். அதனால் நாம் எல்லாம் சகோதரராய் சமாதானமாக வாழலாம். சம்மதமில்லையானால் உங்களில் வயது வந்த ஒவ்வொரு ஆணும் வருடந்தருக்கு நகன்கு தினர் வீதம் எமக்குத் திறை செலுத்தி எமது ஆணைக்குட்பட்டு ஆட்சி செய்யலாம். இவ்விரண்டிற்கும் சம்மதமில்லையானால் எம்மை எதிர்த்துப் போராட வரவேண்டும். - இவையே அவ்வறிவித்தல்களின் நிபந்தனைகளாகும்.

போருக்கு முன்வந்தவர் பெரும்பாலான உயிர்களைப் பலி கொடுத்துத் தோற்றோடினர். எதிரிகள் விட்டுச் சென்ற பொருட்களை முஸ்லிம்கள் கொள்ளை கொண்டனர். கொள்ளைப் பொருட்கள் ஐந்து பங்காக்கப்பட்டு, ஒரு பங்கு அரசாங்கப் பொக்கிஷத்துக்குச் சேர்க்கப்பட்டது. ஏனைய பொருட்கள் வீரர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டன.

அக்காலத்துப் போர்முறை இக்காலத்துப் போர்முறை போன்றதன்று. இருபுறத்து வீரர்களும் களத்தில் வியூகம் வகுத்து நிற்க, ஒருவர் களத்துக்கு வந்து, ஒருவர் தன்னுடன் போராட வரும்படி அழைப்பார். எதிரிகளில் ஒருவர் வந்து அவருடன் போராடுவார். இவ்வாறு தனிப் போர் நிகழும். வாள், வில், கதை முதலிய ஆயுதங்களுடன் குதிரையேறிச் சென்று போராடுவர். போரில் வெட்டுண்டவரின் உடைமைகள் வெட்டியவரைச் சேரும்.

படைக்களத்திற்கு முஸ்லிம் பெண்களும் சென்றிருக்கின்றனர். அவர்கள் வீரர்களுக்கு உதவியாளர்களாகப் பணிபுரிந்திருக்கின்றனர். சில சமயங்களில் அவர்களும் எதிரிகளைத் தாக்கி வெற்றி கண்டிருக்கின்றனர்.

தளபதி அபூ உபைதா படை நடாத்திச் சென்று அபுலகுதுசு, கனசரீன்' பகுலபு, கிம்மசு, எறுமூக், பைத்துல் முகத்தஸ், கலபு, அகுகாசு முதலிய நகரங்களைக் கைப்பற்றிக் கொண்டு ஆங்காங்கு அரசை நடாத்த ஒவ்வொரு தலைவரை நியமித்து, அவருக்குப் படைத்துணையும் அளித்துவிட்டுச் சென்றார். இறுதியாகத் தோல்வி கண்ட மன்னர்களில் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்ட கலபு மன்னன் யூக்கினு என்பவரின் அநுசரணையு

ஹிறக்கீல் மன்னனின் அரசிருக்கையான அந்தாக்கியாவையும் கைப்பற்றினன் ஹிறக்கீல் மன்னன் இரவோடிரவாக தன் குடும்பத்தாருடன் கப்பலேறி ஓடி ஒளிந்தான். தளபதி அபூ உபைதாவே ஷாம் தேசம் முழுவதற்கும் ராஜப் பிரதிநிதியாக நியமனம் பெற்றார்.

## முக்கியமான கருத்துக்கள் :

அபுல் குதுசு மேற் படையெடுத்துச் சென்றபொழுது இடையில் சந்தித்த வேதியன் பெருமானாரின் பெரிய தந்தையின் பௌத்திரரான அப்துல்லாவைச் சுட்டிக் காட்டி, அவர் இன்னாரெனத் தெரிந்து கொண்டபின் தளிரும் மரத்தை யுடையதே ஆனதால்தான் உங்கள் நபியின் ஒளி இவரின் முகத்தில் தரித்தது' என்று கூறியிருக்கிறான்.

அபுல்குதுசு போரில் பெற்ற கொள்ளைப் பொருட்களில் பெண்களை வீரர்களுக்குப் பங்கீடு செய்யுந் தருணத்தில் அப்துல்லா முதலிற் சென்று மன்னனின் மகளை தனக்குத் தரவேண்டும் எனக்கேட்டு பெற்றுக் கொண்டிருக்கிறார். மன்னனின் மகள் தன்னை யாருக்குக் கொடுப்பார்களோ என அங்கலாய்ப்பாள். படைத் தலைவனே எனக்கு எனத் தெரிந்தால் அவள் நிம்மதியடைவாள் எனக் கருதியே அப்துல்லா அப்படிச் செய்திருக்கிறார்.

சாராயம் குடித்தவருக்கு 40 அடி அடிக்க வேண்டும் என்ற அலி (ரலி) அவர்களின் தீர்ப்பு அமுல் செய்யப்பட்டிருக்கிறது.

ஜபலத்திபுனு ஐக்கமுக்கும், பசாரித் இளைஞர் ஒருவருக்குமிடையில் கஃபாவைத் தவாபு செய்யும்போது ஏற்பட்ட பிரச்சினைக்கு கலீபா அவர்கள் அரசனாயினும் ஆண்டியாயினும் இஸ்லாத்தில் ஏற்றத் தாழ்வில்லை; யாவருக்கும் நீதி ஒன்றே எனக் கூறி, ஜபலா மன்னன் பழிக்குப் பழி கொடுக்கவேண்டுமெனத் தீர்ப்பு வழங்கியிருக்கிறார்கள்.

தளபதி அபூ உபைதா அவாசிமுடைய ஊராருக்கு இரங்கி அவர்கள் இறை கொடுக்க இணங்கியதால் அவர்களிடமிருந்து பெற்ற கொள்ளைப் பொருட்களைத் திருப்பிக்கொடுத்திருக்கிறார்கள். இந்தச் செய்தி அடுத்துள்ள நகரங்களுக்கெல்லாம் பரவியதும் அரபிகளின் சிறந்த குணத்தை மெச்சி தாமாகவே வந்து வந்து இறை கொடுக்க ஒப்பி இணக்கம் பெற்றுச் சென்றிருக்கின்றனர்.

கன்சரீன் மன்னன் தளபதிக்கு எழுதிய கடிதத்தின் வாசகத்தைக் கேட்ட காலிது, இது வஞ்சனையாக எழுதப்பட்ட கடிதம்; இதை நம்பி நீங்கள் ஒப்பந்தம் செய்யக் கூடாது எனத்தடுத்தார். தளபதி 'மறைவான கருமங்களை அல்லாஹ்வே அறிவான்' என்று கூறிச் சில நிபந்தனைகளுடன் ஒப்பந்தம் எழுதிக்கொடுத்திருக்கிறார்.

குதிரை விளையாட்டின்போது விழுந்த சிலைக்கண்ணுக்குப் பதில் கன்சரின் நகரினர் தளபதியைப் போன்று சிலை செய்து அதன் கண்களைப் பிடுங்கிப் பழி தீர்க்க அனுமதிக்கப்பட்டிருக்கிறது.

இறகு தேடிச்சென்ற தொண்டர்கள் மாதுளை, நாரத்தை முதலிய மரங்களை வெட்டிக்கொண்டு வந்திருப்பதைக் கண்ட தளபதி, கனிதரு மரங்களை வெட்டினால் நீங்களே வேதனைக்குட்படுத்தப் படுவீர்கள் என எச்சரித்திருக்கிறார்.

கன்சரீன் போரில் அப்துற் றகுமானின் வீரத்தைக் கண்ட ஜபலா அவரை கிறிஸ்தவ மதத்தை தழுவிக்கொண்டு தன்னுடன் சேர்ந்து கொண்டால் பெருந் திரவியம் தருவதாகவும், தனது மகளை விவாகம் செய்து வைப்பதாகவும் ஹிறகீல் மன்னனிடம் பெரும் பதவியொன்றைப் பெற்றுத் தருவதாகவும் கூறினன். அவர் சினம் கொண்டு கலிமாச் சொல்லி அவன்மேல் வாளை வீசினார். அதனால் அவனது தோளில் ஊறு பட்டது.

பெருமானாரின் முடி புனைந்த தொப்பியை அணிந்து சென்று போர்களிலெல்லாம் வெற்றியீட்டி வந்த காலிது, கன்சரீன் போருக்குப் போகும்போது மறந்து விட்டுச் சென்ற அந்தத் தொப்பியை காலிதின் மனைவி எடுத்துச் சென்று படைக்களத்தில் புகுந்து அதனைக் காலித்திடம் கொடுத்திருக்கிறார்.

நிராயுதபாணியாக ஒற்றுமை பேசவந்த கறுபிசு மன்னனை அரச மரியாதையுடன் வரவேற்று உபசரித்து ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கிறது.

போரில் பல தந்திரோபாயங்கள் கையாளப்பட்டிருக்கின்றன.

அடைக்கலப் பொருளெனக் கூறி இருபது பெட்டகங்களுள் வீரர்கள் புகுந்திருந்து கோட்டைக்குச் சென்று வெளிப்பட்டு எதிரிகளைக் கொன்று றசுத்தன் நகரைக் கைப்பற்றியிருக்கிறார்கள்.

தோற்றோடுவது போலப் பாசாங்கு செய்து திடீரெனத் திரும்பி, பின்தொடர்ந்தவர்களை எதிர்த்துச் சங்காரஞ் செய்திருக்கின்றனர்.

போரிடத்து வீரம் பேசுவதும் சகஜமாய் இருக்கிறது. அறபிகளின் மன உறுதியும் பெருமானாரின் முன்னறிவிப்பில் நம்பிக்கையுமே இந்தப் போரில் வெற்றியளித்திருக்கின்றன.

அறுபதினாயிரம் உறூமிகளை அறுபது பேரே முஸ்லிம்கள் எதிர்த்துப் போராடி வெற்றி பெற்றிருக்கின்றனர்.

காலிது எதிரிகளின் பாசறைக்குட் சென்று, படைத்தலைவனுடன் அஞ்சாது வார்த்தையாடி சிறைப்பட்டிருந்த ஐந்து தலைவர்களை மீட்டு வந்திருக்கிறார்.

முஸ்லிம்கள் தொழுகையிலிருக்கும் போது அவர்களைச் சங்காரம் செய்ய உறூமிகள் செய்த சதித்திட்டம் தக்க தருணத்தில் முறியடிக்கப்பட்டது.

பாசறையிலிருந்த பெண்கள் போர்க்களத்திலிருந்து திரும்பி ஓடி வந்த வீரர்களின் குதிரைகளின் முகத்திலடித்து அவர்களை இழித்துக்கூறி திருப்பி விட்டிருக்கின்றனர்; தாமே எதிரிகளை எதிர்த்துச் சங்கரித்துமிருக்கின்றனர்.

எதிரிகளின் அம்புகளுக்கிலக்காகி முஸ்லிம்கள் பலர் கண்ணிற் காயப்பட்டனர். அத்தினத்தைக் குருட்டுத் தினமென அழைத்தனர்.

போரில் ஷஹீதானால் பெருமானாரை ஹௌலல் கவுதரில் சந்திப்போம் என்பதில் அசையாத நம்பிக்கை கொண்டிருக்கின்றனர்.

கலீபா உமர் கத்தாப் அவர்களே நேரில் பைத்துல் முகத்தஸுக்குச் சென்று அதனைக் கைப்பற்றிருருக்கிறார்கள்.

மிகமிக வலிமை வாய்ந்த கலபு நகரத்தை தாமிசு என்ற அடிமையின் தந்திரோபாயத்தினாலும் வலிமையினாலும் கைப்பற்றியிருக்கிறார்கள், இஸ்லாத்தில் நம்பிக்கை வைத்திருந்த தனது தம்பி யூகினா எனும் வேதியனைக் கொன்ற கலபு மன்னன் யூகினா தோல்வியை ஒப்புக்கொண்டு முஸ்லிமாகி. முஸ்ம்கள் அருகாசு நகரைக் கைப்பற்ற சூழ்ச்சிகள் செய்ததுமன்றி, இறுதியில் அந்தாக்கியாவையும் கைப்பற்ற உதவியாயிருந்தான்.

# கணிதமும் அதன் ஆற்றலும்

செல்வி ஏ. ஆர். ஷினத்துல் முனவ்வரு

மனிதனது ஆரம்பமே கணிதத்தினது ஆரம்பமெனலாம். ஆதிமனிதன் முதல், நவீன விஞ்ஞான யுகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் இக்கால மனிதன்வரை தனது வாழ்வின் தேவைகளை நிறைவேற்ற முயற்சிக்கும் போதெல்லாம் கணிதத்தின் தேவைகளை உணரத் தவறுவதில்லை. மனிதன் தனது அடிப்படைத் தேவைகளான உணவு, உடை, உறையுள் போன்றவற்றைத் தேடவேண்டிய நிர்ப்பந்தத்துக்குள்ளானவன். இவ்வடிப்படைத் தேவைகள் அக்கால மனிதன்முதல் இக்கால மனிதன் வரை பொதுவானதேயாகும், இந்த சகல தேவைகளினதும் பூர்த்தி அவனது உச்சத் திருப்தி எனக் கொள்ளலாம். இவற்றைத் தேடும் முயற்சியின்போது மனிதன் கணிதத்தின் முக்கியத்துவத்தை உணர்கிறன். உதாரணமாக பண்டமாற்றுப் பொருளாதார யுகத்தில் வாழ்ந்திருந்த மனிதன் தனக்கு ஒரு குறிப்பிட்ட தொகை அரிசி தேவைப்படும்போது தன்னிடமிருக்கும் ஏதாவதொரு பொருளின் குறித்ததொரு பங்கைக் கொடுத்தான். அதைவிடக் குறைவான ஒரு தொகையை பண்டமாற்றுச் செய்வதால் தனக்கு எவ்வளவு அரிசி கிடைக்க வேண்டுமென அவன் கணிக்க வேண்டுமாயின், அங்கு கணிதம் தனது ஆற்றலினால் இப்பிரச்சினைக்குத் தீர்வு காண்கிறது. மேற்கூறிய உதாரணம் கணிதம் மனித வாழ்க்கைக்கு எத்துணை அவசியம் எனக் கூறி நிற்கிறது.

ஆதிகாலத்தில் மனிதன் கணிதத்தின் அடிப்படையான எண்ணல் (கணக்கிடுதல்) அறிவில்லாமல் தனது செல்வங்களைக் குறிப்பாக கால் நடைகளைக் கணக்கிடக்கூட முடியாமல் கவலையுற்றுன். அதன்பின் படிப்படியாக ஏற்பட்ட அறிவு வளர்ச்சியும் சிந்தனை முதிர்ச்சியுமே கணிதத்தை இன்றைய மகோன்னத நிலைக்கு உயர்த்தியது. கணிதம் மனித வாழ்வின் மிகப்பெரும் வழிகாட்டியாகத் தொழிற்படுவதும் மனித மேம்பாட்டுக்கு உழைப்பதும் அதன் ஆற்றலுக்கு எடுத்துக்காட்டுகளாகும். கணிதத்தில் பூச்சியம் எந்தளவு முக்கியத்துவம் பெறுகிறதோ அந்தளவு முக்கியத்துவத்தை கணிதம் சகல அறிவியல் துறைகளிலும் பெற்றிருப்பது இதன் ஆற்றலுற்கு மேலும் சான்று பகர்வதாகும்.

இன்றைய விஞ்ஞான வளர்ச்சி என்ன; நாட்டுக்கு நாடு காணப்படும் இமாலயப் பொருளாதாரச் சிக்கல்கள் என்ன; மனிதனது அன்றுடத் தேவைகளை நிறைவேற்றப் பயன்படும் நவீன சாதனங்களின் உற்பத்தி என்ன; இவை சகலவற்றையும் நெறிப்படுத்தி இம்மிப் பிசகின்றித் தீர்வுகளைப் பெறுதற்குக் கணிதம் வழங்கும் பங்கு மகத்தானதாகும். கணிதம் ஒரு மனிதனின் சிந்தனையை நெறிப்படுத்தவும் உதவுகிறது. பிழையான தகவல்களைக் கொண்டு பிழையான முடிவைப் பெற்றுவிடாமல் தனது சிந்தனை கூரியதாகவும், நுணுக்கமானதாகவும் அமைய கணிதம் தன் பங்களிப்பை வழங்குகிறது. பிளேற்ரோ, அரிஸ்டோட்டில் போன்ற சிந்தனைவாதிகள் கூட தமது தர்க்கத்தை நெறிப்படுத்தவும் நியாயப்படுத்தவும் கணித எண்ணக் கருக்களையே பயன்படுத்தியிருப்பது, அதன் ஆற்றலை மென்மேலும் உறுதிப்படுத்துகிறதெனலாம். ஒரு பேராசான் தனது கலைக்கூடத்தின் நுழைவாயிலில் "கணிதம் தெரியாதிருப்பவன் இங்கு நுழையாதிருப்பானாக" எனக் குறித்

திருந்தாராம். இதை விடக் கணிதத்தின் ஆற்றலைக் காட்டும் உறுதியுரை ஏது?

மூத்த நாகரீகங்களின் உறைவிடங்களான சிந்து, மொசப்பட்டாமிய நதிக் கரைகளில் ஆரம்பித்த கணித வியாபிதம் முடிவேயில்லாத வளர்ச்சியை அடைய, கணிதம் விருத்தியுற உரோமர், பபிலோனியர், அராபியர், போன்றோரது பங்களிப்பு ஈண்டு குறிப்பிடற்பாலது. அப்படிக் கூறுவதை விட கணிதம் தனது பங்கின் முக்கிய ஆற்றலைக்கொண்டு சமூகத்தாரை நாகரீக மேம்பாடடையச் செய்தது என்பது பொருத்தமானதாகும். அக்காலை வெறும் எண்ணிக்கை காணலுடன் மட்டும் எல்லை கொண்டிருந்த கணிதம், பின்னர் கேத்திர கணிதம், அட்சர கணிதம் என வியாபகமானது. அதன் பின்பு அது மேலும் பல கிளைகளைத் தன்னகத்தே கொண்ட மிகப் பெரும் விருட்சமாக மாறியது. இன்று அதன் நிலை சகல துறைகளினதும் வளர்ச்சிக்கு உரமாகவும், ஊன்றுகோலாகவும் தொடர்கிறது. கணிதமின்றி இன்று விஞ்ஞானமில்லை; பொருளியலில்லை; தர்க்கவியலில்லை; பொறியியலில்லை. இப்படிச் சகல கலைகளிலும் அது இரண்டறக் கலந்துள்ளது.

இன்றைய நவீன காலம் பல்வேறு சிக்கல்களைக் கொண்டதும், அறிவு விருத்தி அதிகரித்ததுமான ஒரு சமுதாயத்தைக் கொண்டது. அன்று பத்தும் பத்தும் இருபது என்ற சாதரண கணிப்புக்களையே - கைகளால் - விரல்களை மடக்கிக் கணிப்பீடு செய்து கொண்டிருந்தவன், இன்று பல கோடிகளைக் கணக்கிட வேண்டிய நிலைமையிலுள்ளான். இக்காலகட்டத்தில் மனிதன் சிக்கலான கணிப்புகளைக் கூட மிக விரைவாகச் செய்து முடிக்கவேண்டிய கட்டாய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளான். இது கணிதத்தில் அபிவிருத்தியை ஏற்படுத்தியது மட்டுமன்றி, கம்பியூட்டர் என அழைக்கப்படும் நவீன கணித இயந்திரத்தையும் கண்டுபிடிக்க மனிதனைத் தூண்டியது. இந்தக் கம்பூட்டர்கள் கணித வரலாற்றில் ஒரு திருப்பு முனையாகும். இதன்பின் கணிதத்தின் ஆற்றல் ஏலவே இருந்த நிலைமையை விட பன்மடங்கு அதிகரித்தது.

நவீன போர்த் தந்திரோபாயங்கள் மிக்க சுவாரசியமானவை. பயங்கரமானவையும் கூட. ஏவுகணைகள், குண்டுகள், றொக்கெற்றுக்கள் போன்றன அன்றாடம் புதினப் பத்திரிகை வாயிலாக அறியக்கூடிய கருவிகள். இக்கருவிகள் தான் ஒரு நாட்டின் இன்றைய பாதுகாப்பு அரண்கள். இவை யாவற்றையும், இயக்குவதற்கு கணிப்பீடு மிக முக்கியமானது. இது கணிதத்தின் வாரிசேயன்றி வேறில. கணிப்புத் தவறுமாயின் பாரதூரமான விளைவுகள் கூட ஏற்பட இடமுண்டு.

இன்றைய விமானப் போக்குவரத்துத் துறையை எடுத்துக்கொண்டால் ஒலிவேக விமானங்கள்கூடப் பயன்படுத்தப்படுகின்றன. அவ்விமானங்களிற் காணப்படும் "ருடார்" இயந்திரங்கள் கணிப்புக்களைச் செய்கின்றன. இந்த "ருடாரின்" அமைப்புக்கூட மனிதனின் முயற்சியே. இதன் கணிப்பீடுகளில் இம்மியளவு பிசகேனும் ஏற்பட்டால் பயங்கர ஆபத்துக்களே விளையும். இதிலிருந்து கணிதத்தின் ஆற்றலை நன்கு உணரலாம்.

'நீல் ஆம்ஸ்ரோங்' என்ற விண்வெளி வீரர், சந்திரனின் தரையில் மிகப் பாதுகாப்பாக எந்தவித ஆபத்துமின்றி வைத்த பாத அடிகள் கணிதத்தின் ஆற்றலை உணர்த்துகின்றன. விஞ்ஞானத்தின் இத்தகைய அரும்பெருஞ் சாதனைகளெல்லாம் கணிதத்தின் ஆற்றலுக்குச் சான்றுகளேயன்றி வேறில்லை. எதிர்காலத்திலும் கணிதம் தன் ஆற்றல் மூலம் மிகப்பெரும் சாதனைகளுக்கு ஆடிகோலிக் கொண்டேயிருக்கும். மனிதனுகத் தனது அழிவைத் தேடிக் கொள்ளாதவரை மனித சமூகத்துக்குக் கணிதம் தனது ஆற்றலை மென்மேலும் விருத்தியுறச் செய்து அவனது வாழ்வு மேம்பாடடைய உறுதியான ஊன்றுகோலாகவும் இருந்துகொண்டேயிருக்கும்.

# மனித உரிமைகள்

செல்வி சித்தி பாதிமா ஷஹ்ரு

"வாழ்வுக்கும் விடுதலைக்கும் தற்பாது காப்புக்கும் ஒவ்வொருவருக்கும் உரிமை யுண்டு."

மனித உரிமைகள் சர்வதேசப் பிரகடனத்தின் மூன்றும் வாசகம் இவ்வாறு எடுத்தோதுகின்றது. இதன்கீழ் உலகில் வாழும் ஒவ்வொரு மனிதனுக்கும் குறைந்த பட்சம் தன் பசியைத் தீர்த்துக் கொள்வதற்கு உணவையும்; மழை, வெயில் போன்ற காலநிலைத் தாக்கங்களிலிருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்வதற்கு ஓர் உறைவிடத்தையும் அமைத்துக் கொள்வதற்கு உரிமையளிக்கப்பட்டுள்ளது.

இன்றைய உலகிலே மனித உரிமைகள் அதுபற்றிய ஒரு பொதுச்சாதனை நியமத்திலே உறுதிப்படுத்தப்பட்டுள்ளன. எனினும் இம்மனித உரிமைகளின் பிரசுரத்திற்கு முன்னுள்ள வரலாற்றுப் பின்னணியை அறிதல் முக்கியமானதாகும்.

எமக்குப் பல நூற்றுண்டுகளுக்கு முன் வாழ்ந்த மக்கட் சமுதாயத்தினருக்கு வரையறுக்கப்பட்ட சில உரிமைகளே வழங்கப்பட்டிருந்தன. ஆயினும் அவ் வரையறுக்கப்பட்ட சில உரிமைகளும் சமுதாயத்தில் வாழ்ந்த எல்லா மக்களுக்கும் வழங்கப்பட்டிருக்கவில்லை. சமுதாயத்தின் பிரஜைகள் எனக் கணிக்கப்பட்டவர்களுக்கு மட்டும் அடிப்படை உரிமைகளில் சில வழங்கப்பட்டிருந்தன. உதாரணமாக ஜனநாயகத்தின் முன்னோடியான ஏதன்ஸ் குடியரசிலே சில குறிக்கப்பட்ட தகுதிகளுக்கு இயைந்தவர்கள் மட்டுமே பிரஜைகளாகக் கருதப்பட்டு, அவர்களுக்கு மாத்திரமே உரிமைகள் வழங்கப்பட்டிருந்தன. பெண்களும், குறிப்பிட்ட வயதிற்குக் குறைந்த ஆண்களும், சிறுவர்களும் அயல் நாட்டிலிருந்து வந்து குடியேறியவர்களும் தகுதிகள் அற்ற பிரஜைகளாகக் கருதப்பட்டு, எதுவித உரிமைகளோ சலுகைகளோ வழங்கப்படாதவர்களாயிருந்தனர்.

இவ்வாறு வழங்கப்பட்ட சில உரிமைகளும் மறுக்கப்பட்டபோது அவற்றை நிலைநாட்டவும், பாதுகாக்கவும் வேண்டிய அவசியநிலை ஏற்பட்டது. இதன் பொருட்டு பல்வேறு மக்கட் சமூகங்கள் பல்வேறு காலகட்டங்களில் செய்து வந்த புரட்சிகள் காரணமாகவும், அவையொத்த வேறுவகை இயக்கங்கள் காரணமாகவுமே மனித உரிமைகள் பெறப்பட்டு வந்துள்ளன. இவ்வுரிமைகள் பற்றிய வரலாற்றுப் பின்னணியை நோக்குமிடத்து, அழியா இடம் பெற்றுள்ள ஆங்கிலேயப் புரட்சி, பிரான்சியப் புரட்சி, சீனப் புரட்சி, ரஷ்யப் புரட்சி ஆகியவை இதற்குத் தகுந்த ஆதாரங்களாகும்.

ஆரம்பத்தில் ஒரு குறிப்பிட்ட சமுகத்தினால் பெறப்பட்ட உரிமைகள் அச்சமுகத்திற்கு மாத்திரமானவை என வரையறுக்கப்பட்டிருந்த போதும், காலப் போக்கில் அவை எல்லா மனித சமுதாயத்திற்குமான உரிமைகளாகவே கொள்ளப்பட்டன.

இவ்வாறு விருத்தியடைந்த உரிமைகளைத் தொகுத்துக் கூறின், 17 - ம் நூற்றாண்டில் மதச் சுதந்திரம், விருப்புரிமை, அரசாங்கத்தில் பங்குபற்றல், வெளிப்படுத்தற் சுதந்திரம், சுதந்திரமாக வாழ்வதற்குரிமை, கண்டனஞ் செய்ய உரிமை ஆகியவையும்; 18 - ம் நூற்றாண்டில் நீதிச் சுதந்திரம், வழிபாட்டுச் சுதந்திரம், பேச்சுரிமை, அச்சிதழ்ச் சுதந்திரம், மதச் சுதந்திரம் ஆகியவையும் ; 19 - ம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் 20 - ம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட புதிய உரிமையாக பொருளாதார, சமூக உரிமைகளையும் கூறலாம்.

இவ்வுரிமைகளைப் பேச்சளவில் மட்டுமன்றி நடைமுறையிலும், உண்மையாக ஒவ்வொரு மனிதனுக்கும் பெற்றுக்கொடுப்பதே ஐக்கிய நாடுகள் சபையின் தலையாய குறிக்கோளாகும். இக்குறிக்கோளின் பொருட்டு பொதுச்சபை 1948 டிசம்பர் 10 - ம் திகதி மனித உரிமைகள் பற்றிய ஒரு சர்வதேசப் பிரகடனத்தை ஏற்றுக் கொண்டது. இதன்கீழ், வரலாற்றில் முதன் முறையாக மனித உரிமைகளைப் பாதுகாக்கவும், பின்பற்றவும் சர்வதேச சமுதாயம் பொறுப்பேற்றதுடன், அவ்வாறு பொறுப்பேற்றது ஒரு நிரந்தரக் கட்டுப்பாடு எனவும் கொள்ளப்பட்டது. இப்பிரகடனம் உருவாவதற்குக் காரணமாக அமைந்தவை மக்களின் புரட்சிகளும், அதையொத்த இயக்கங்களுமேயாகும்.

இப்பிரகடனம் பல்வேறுவகை மனித உரிமைகளையும் எடுத்துரைக்கும் 30 வாசகங்களைக் கொண்டுள்ளது. இவ்வாசகங்களில் முதலாம் இரண்டாம் வாசகங்கள் பொதுவானவை. 3 - 21 வரையான வாசகங்கள் ஒப்புக்கொள்ளப்பட்ட குடிசார், அரசியல் உரிமைகள் பற்றி உரைப்பவையாயும்; 22 – 27 வரையானவை சமூக பொருளாதார உரிமைகள் பற்றி உரைப்பவையாயும் அமைந்துள்ளன. 28 - 30 வரையான இறுதி வாசகங்கள் இவ்வுரிமைகளைப் பெறத்தக்க சமூக, சர்வதேச அமைப்பின் கீழ் வாழ்வதற்குள்ள உரிமையையும், ஒவ்வொருவருக்கும் சமூகத்தின் மேலுள்ள கடமைகளை வலியுறுத்துவதாகவும் அமைந்துள்ளதுடன், 30 - ம் வாசகம் இவ்வுரிமைகள் அனைத்தின் அதிகாரத் தன்மையையும் வலியுறுத்துவதாயும் அமைந்துள்ளது.

பொதுச்சபை, மனித உரிமைகள் பிரகடனம் என்பதனை எல்லா அங்கத்துவ நாடுகளுக்கும், எல்லா மக்களுக்குமான ஒரு சாதன நியமமாகப் பிரகடனம் செய்துள்ளது.

அரசியல் முறையிலும், கொள்கைகள் அடிப்படையிலும் முரண்பாடுடைய பல நாடுகளும் மனித உரிமைகள் எனும் மகுடத்தின் கீழ் ஒரு உடன்பாட்டுக்கு வந்த முதல் நிகழ்ச்சியாகிய இம்மனித உரிமைகள் பிரகடனம், மனித உரிமைகளின் வரலாற்றிலே ஏற்படுத்தப்பட்ட எல்லா ஒப்பந்தங்களையும் விட பல வகையில் சிறப்புடையது. அவ்வொப்பந்தங்கள் ஏதோவொரு குறித்த சமூகத்தின் சில உரிமைகளையே வலியுறுத்தி நின்றன. ஆதலால் இவை ஒரு குறுகிய அமைப்பையே பெறுகின்றன. ஆனால் இப்பிரகடனம் எல்லா மனித சமுதாயத்திற்குமான ஒரு பொதுச் சாதனை நியமமாக விளங்குவதால், பரந்த அமைப்பைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு வாசகத்திலும் எடுத்தோதப்படும் " ஒவ்வொரு மனிதனும் .......... உரித்துடையவனாவான் " எனும் வார்த்தைகள், ஒவ்வொரு ஆணை மாத்திரமன்றி, ஒவ்வொரு பெண்ணையும் குறிக்கின்றதென்பது எல்லா மனிதர்களுக்குமான ஒரு சாதனை என்பதை வலியுறுத்தி நிற்கின்றது.

இப்பிரகடனம் சட்ட முறையினாலன்றி, அற முறையிலும், அரசியல் முறையிலுமே நாடுகள் மேல் கடமைகளைச் சுமத்துகின்ற தென்பது குறிப்பிடத்தக்க ஒரு விடயமாகும் உலகம் முழுவதற்கும் அடிப்படை உரிமைகளைப் பெற்றுக் கொடுப்பதிலும், உலக நாடுகளில் அடிப்படை உரிமைகளின் நிலைபற்றி அவதானிப்பதிலும், ஈடுபட்டுள்ள உலகளாவிய நிறுவனங்களில் ஐக்கிய நாடுகள் தாபனமும், அதனுடன் இணைந்,

இயங்கும் இதர ஸ்தாபனங்களும் மிக முக்கியமானவைகளாகும். இதற்கு உதாரணங்களாக பொதுச் சபையுடன்' யுனஸ்கோ, சுகாதாரஸ்தாபனம், தொழிலாளர் சம்மேளனம், சுதந்திரத் தொழிற் சங்கம், மனித உரிமைகள் சங்கம் ஆகியவற்றையும்; சர்வதேச மன்னிப்புச் சங்கம், சர்வதேச ஜூரர்கள்சபை ஆகியவற்றை இப்பணிகளில் ஈடுபட்டுள்ள முக்கிய தனிப்பட்ட நிறுவனங்களுக்கும் உதாரணங்களாகக் கொள்ளலாம்.

மனித உரிமைகள் பிரகடனத்திலே தடைசெய்யப்படும் அடிமைத்தனம் இன்னும் சில நாடுகளில் பல வடிவங்களில் நிலவுவதும்; அதேபோன்றே சித்திரவதை, சட்டப்படி தடை செய்யப்படினும் பல நாடுகளில் வழக்கிலிருப்பதும்; மிகக் கிட்டிய காலக் கெடுவின் உள்ளேயே சில நாடுகளில் பகிரங்கமாக மனித உரிமைகள் மீறப்பட்ட சம்பவங்களும்; இன்றைய உலகிலே நாடற்ற அகதிகளாக இன்னும் தம் உரிமைகளுக்காகப் போராடிக் கொண்டிருக்கும் பல நாட்டு மக்களின் அகதி நிலையும் - சமாதான அமைதி மிக்க உலகிற்குப் பங்கம் விளைவிக்கும் செயல்களாக, உலகில் வாழும் எல்லா மக்களுக்கும் மனித உரிமைகளில் உள்ள கடமைகளை இன்னும் சுட்டி நிற்கின்றன.

இலங்கைக் குடியாட்சிச் சோசலிச யாப்பிலே, அடிப்படை உரிமைகள் பொது சனப் பாதுகாப்புக் கருதி சில சூழ்நிலைகளில் மாத்திரம் மட்டுப் படுத்தக்கூடியனவாகும். இவ் யாப்பின்படி பிரஜையொருவன் தன் அடிப்படை உரிமைகள் ஆட்சித்துறை நடவடிக்கை மூலம் மீறப்படுகின்றது என்று கண்டால், உயர் நீதிமன்றத்திற்கு மேன்முறையீடு செய்ய அருகதையுள்ளவனாவான்.

இவ்வரசியலமைப்பில் அடிப்படை உரிமைகளுக்கு அளிக்கப்பட்டுள்ள மிக முக்கிய சிறப்பம்சமாக, முதன்முறையாக அரசாங்க அலுவலகங்கள், கூட்டுத்தாபனங்கள் ஆகியவற்றிலுள்ள அலுவலர்கள் அடிப்படை உரிமைகளை மீறுமிடத்து, அவற்றை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்கென நியமிக்கப்பட்டுள்ள நிருவாகத் துறைக்கான பாராளுமன்ற ஆணையாளர் அழைப்பின் மூலம் ஒவ்வொரு பிரஜையும் தன் அடிப்படை உரிமைகளைப் பாதுகாக்கவும், நிலைநாட்டவும் இடமளித்திருப்பதைக் குறிப்பிடலாம்.

இவற்றைத் தொகுத்து நோக்குமிடத்து, இன்றைய உலகிலே சுதந்திர, சகோதரத்துவ, சமத்துவ உரிமைகளைச் சமாதானமாகப் பெற்றுக் கொடுப்பதற்கு ஐக்கிய நாடுகள் ஸ்தாபனமும், உலகிலுள்ள பல்வேறு நாடுகளின் அரசாங்கமும் அரும்பாடுபட்டு அவற்றை முன் நடத்திச் செல்லுவதில் ஈடுபட்டிருப்பது மனித குலத்தின் மனச் சாட்சியை மதிக்கும் தன்மைக்குச் சான்றுகளாகும்.

# இஸ்லாத்தில் பெண்ணுரிமை

செல்வி ஆரிபா ஹமீட்

உத்தமத் திருத்தூதர் உலகில் உதித்த காலத்தில் வாழ்ந்த, நேர்வழியின்றி நிர்க்கதியான அறிவிலி மக்களில் ஒரு பகுதியினர் தமது ஆசை மனைவி பத்து மாதம் சுமந்து படாத பாடுபட்டுப் பிரசவிக்கும் பிள்ளை ஆணாக இருப்பின், ஆனந்தக் கூத்தாடி பேருண்டி படைத்து பெருவிழாக் கொண்டாடினர். ஆனால் அது பெண்ணாக இருப்பின் அவமானச் சின்னம் ஏற்பட்டு விட்டதே என்று ஆத்திரம் மேலிட அப் பச்சிளம் குழந்தையை மடுவிலே போட்டு 'முடிந்தது சாபம்' என்று முழங்கும்வரை அவர்களின் ஆத்திரம் தீராது. இவ்வாறிருந்த இழிநிலையினைத்தான் ஆண்டவன் அல்குர்ஆனில் பின்வரும் கருத்துப்படக் கண்டிக்கிறான்.

''வறுமையைப் பயந்து உங்கள் பச்சிளம் பாலகர்களைக் கொல்லாதீர்கள். உங்களுக்கு உணவளித்துக் காப்பதுபோல் அச்சிசுக்களுக்கும் உணவளிப்பேன்'' என்றும், ''அக்குழந்தைகளைக் கொலை செய்யும் குற்றத்திற்கு கடும் தண்டனை காத்திருக்கிறது.'' என்றும், இறைவன் தெளிவு படுத்துகின்றான். மேலும் பெருமானார் (ஸல்) அவர்களின் பெரும் பிரச்சாரத்தின் பேறாக பெண்ணினம் பூண்டோடு அழியும் நிலை தவிர்க்கப்பட்டு அவர்களும் சமுதாயத்தில் ஒரு பிரதான அங்கம் என்ற நிலை உருவாக்கப்பட்டது.

பெண்களின் அந்தஸ்தை இஸ்லாம் உயர்த்திக் காட்டுகிறது. குர்ஆனில் ''அவன் உங்களை ஒரே நப்ஸிலிருந்து சிருஷ்டித்தான்'' என்று கூறப்படுவது சாதாரண நடைமுறைக்கன்று. ஆணும் பெண்ணும் ''ஆதம்'' எனும் ஒரே மூலத்திலிருந்தே படைக்கப்பட்டவர்கள். எனவே ஒரே மூலத்திலிருந்து தோன்றும் இரு ஜீவராசிகளுள் ஒன்றை ஏற்றமானதென்று அள்ளி அணைப்பதுடன், மற்றதை அவமானத்திற்குரியது என்று ஒதுக்கிவிடுவது எவ்வளவு மடமையானது. இம் மடமையையும் கொடுமையையும் நீக்கி ஆணும் பெண்ணும் ஒரே சிப்பியில் இருந்து தோன்றிய இரு முத்துக்கள் எனப் பறைசாற்றி, பெண்களின் அந்தஸ்தைக் குர்ஆன் மூலம் இஸ்லாம் உயர்த்தி விடுகிறது.

அழிவிலிருந்து காக்கப்பட்ட பெண்ணினத்திற்கு அந்தஸ்து அளித்து விட்டதுடன் மட்டும் இஸ்லாம் அமைதி கொள்ளவில்லை. இஸ்லாம் பெண்களுக்குச் செய்த அடுத்த மகத்தான சேவை என்னவெனில், எத்துணை அநீதியான — சமூக நீதிக்குப் புறம்பான சொத்துடைமை முறையை நீக்கி பெண்களுக்கு சம வாய்ப்பு அளித்தமையாகும். சீதனம் என்னும் கொடிய அரக்கன் எமது சகோதரிகளின் மீது கோரத் தாண்டவமாடி அவர்களின் வாழ்க்கையோடு விளையாடும் இக்காலத்திலே இன்றும் அச் சொத்துடைமை தொடர்ந்திருந்தால் — இஸ்லாம் சொத்துடைமைக்கு ஒரு நீதியான முறையைக் கொண்டுவராமல் இருந்திருந்தால்— எம் சகோதரிகளின் நிலை என்னவாக இருந்திருக்கும்.

இக் கொடுமைகளை நீக்க இஸ்லாமிய அரசியலமைப்புச் சட்ட நூலான குர்ஆனில் இறைவன் பெண்களுக்குரிய சொத்துப் பங்கினை எடுத்துக் கூறுகின்றான். இங்கு நாம் சிந்தித்துப் பார்க்கவேண்டியது, பெண்ணினத்தின் நலனைப் பேணுவதற்கு

இஸ்லாம் எவ்வளவோ காலத்திற்கு முன்னர் நடவடிக்கை எடுத்துள்ளது என்பதாகும். ஆனால் பெண்களுக்குச் சுதந்திரம் பெற்றுக் கொடுப்போர் யாமே என்று மார்தட்டும் மேற்கத்தைய வாதிகள் கூட இந்த இருபதாம் நூற்றாண்டின் "சர்வதேச மகளிர் ஆண்டு" எனப் பிரகடனப்படுத்திப் பெண்களின் உரிமை பற்றிப் பேச வாய் திறக்கின்றனர். ஆனால், பெண்கள் பேய் எனக் கருதப்பட்ட ஏழாம் நூற்றாண்டிலேயே, இஸ்லாம் பெண்களின் உரிமைகளையும் கடமைகளையும் பொறுப்புக்களையும் அதிகாரங்களையும் கூறியுள்ளவாறு எந்த அறிஞராவது கூறியுள்ளாரா? என்று நாம் சிந்திக்க முற்படுகையில் இஸ்லாம் பெண்களுக்கு அளித்த முக்கியத்துவம் தெளிவாகின்றது.

ஒரு கணவனுக்கு தனது மனைவியை விவாகரத்து (தலாக்) செய்யும் உரிமை எவ்வாறு உள்ளதோ, அதே போல் கணவனை நீக்கும் (பஸகு) உரிமையும் பெண்களுக்கு இஸ்லாத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ளது. அதன்பின் வேறொருத்தியை கணவன் மணந்து கொள்ளும் உரிமை உள்ளது போல், வேறொருவனை மணந்து கொள்ள மனைவிக்கும் உரிமை உண்டு. இவ்வுரிமை பெண்களுக்கு உரிய சம உரிமையினைப் பறை சாற்றுகிறது.

மேலும் பெண்கள் கல்வி பற்றிய இஸ்லாத்தின் கொள்கையைப் போற்றாத பெருமக்கள் எவரும் இல்லை எனலாம். "ஒவ்வொரு ஆணும் பெண்ணும் கல்வியைத் தேடிப் படிப்பது கடமை" எனும் பெருமானாரின் பொன்மொழி பெண்களின் தரத்தை இன்னும் உயர்த்தி நிற்கின்றது. எமது நாட்டிலும் எம் சமூகத்தில் பெண்கள் இந் நூற்றாண்டின் இறுதிக் கட்டந்திலிருந்தே கல்வியில் அதிக அக்கறை காட்டத் தொடங்கியுள்ளனர். இலங்கையின் சில பாகங்களில் பெண்கள் கல்வி கற்பது, பாடசாலை செல்வது இழுக்கு எனவும், அவளது பெண்மைக்கு அவமானம் எனவும் கருதப்பட்டு வந்துள்ளது. மேலும் கல்வி கற்ற முஸ்லிம் பெண்கள் தமக்கு வாழ்க்கைத் துணைவனைத் தேடிக் கொள்வது — உயர் கல்வி கற்ற காரணத்தினால் — முடியாத காரியமானதற்கும் சில உதாரணங்கள் உள்ளன. அன்றே பெருமானார் (ஸல்) அவர்கள் பெண் கல்வியின் முக்கியத்துவம் பற்றி உபதேசித்தும், இந்த மடைமை குடிகொண்டிருப்பது சமூக ரீதியாக ஆராயப்பட வேண்டிய விடயமாகும். ஆனால், எல்லாப் பெண்களும், இன்று உணர்ந்துள்ளதுபோல் ஆரம்ப காலந்தொட்டு கல்வியின் சிறப்பை உணர்ந்திருந்தால் பெண்களின் நிலை இன்று மெச்சத் தக்கதாக இருந்திருக்கும். இங்கு கல்வி என்பது இம்மை, மறுமை, இரண்டிற்கும் ஏற்ற கல்வியையே குறிப்பிடுவது கவனத்திற்குரியதாகும். பொறுப்பு வாய்ந்த குடும்பத் தலைவி என்ற முறையில் தன்னையும், தனது கணவனையும், குடும்பத்தையும் இம்மையிலும் மறுமையிலும் நல் வழிப்படுத்தவே பெண் கல்வியை இஸ்லாம் வலியுறுத்துகிறது.

இஸ்லாம் என்னும் நன்னெறி, பெண்களோடு அன்பாக நடந்து கொள்ளுமாறும், அவர்களை அடித்துத் துன்புறுத்த வேண்டாம் என்றும், பல இடங்களில் குறிப்பிடுகிறது. குறிப்பாக பிரபல்யம் வாய்ந்த தங்கள் இறுதி ஹஜ்ஜின் போதும் பெருமானார் (ஸல்) அவர்கள் இக்கருத்தை வலியுறுத்தினார்களாயின் அவர்கள் பெண்களுக்கு அளித்த மகத்துவத்திற்கு வேறு என்ன சான்று வேண்டும்?

பெண் என்பவள் விலைமதிக்க முடியாத பொக்கிஷம். அவள் காண்போருக்கெல்லாம் காட்சிப் பொருளாக இருக்கக்கூடாது; அது பேணிப் பாதுகாக்கப்படல் வேண்டும். தான் அணியும் உடை, பேசும், பழகும் முறை என்பன ஆடவருக்கு பரிவை, பாசத்தை, சகோதர வாஞ்சையை ஏற்படுத்த வேண்டும். அதற்காக ஆண் வாசனையே பிடிக்காதவர்களாக இருக்க வேண்டும் என இஸ்லாம் கூறவில்லை. பெண்களுக்கு அடக்கமும், ஒழுக்கமும், நாணமும் தேவை என்பதுவே இங்கு வலியுறுத்தப்படுகிறது.


ஆணினத்துக்குப் பல உரிமைகளைக் கொடுக்கும் இஸ்லாம், அதே விகிதத்தில் பெண்ணுக்கும் உரிமை வழங்கியிருக்கிறது. ஒரு பெண்ணின் சீரான வாழ்விற்காக தர்க்க ரீதியான புரட்சிக் கோஷங்களையும் இஸ்லாம் எழுப்பிக்கொண்டிருக்கிறது.




SCHOOL PREFECTS



SCHOOL POULTRY FARM



District Champion Netball Team - Under 15




Group obtained First place in the District level Commerce Quiz Competition conducted by the Ministry of Education.



Hon. Education Minister Al-Haj Dr. Badi-ud-din Mahmud with our Teachers on the occasion of Science Laboratory opening.



Picture clicked after the Official Opening of the First Upstair Block.



STUDENTS AT THE SCIENCE LABORATORY



STUDENTS AT WORK IN THE HOME SCIENCE LAB.

# உணவைப் பாதுகாத்தலும் பதனிடுதலும்

செல்வி எம். ஐ. மதீனா ( ஆசிரியை )

பருவ காலமல்லாத காலங்களில் உபயோகப் படுத்துவதற்கெனப் பழங்களையும், மரக்கறிகளையும், கழிவுப் பாகங்களை நீக்கி, உண்ணக்கூடிய பாகங்களை மட்டும் பாதுகாத்து வைப்பதற்குப் பல வழிமுறைகளுள் ளன. அத்துடன் எல்லாக் காலங்களிலும் சாதாரணமாக எடுக்கக்கூடிய உணவுப் பொருட்களையும் மொத்தமாகப் பெற்றுக் கொள்ளும் சந்தர்ப்பங்களில் அவற்றை ஓரளவு நீண்ட நாட்களுக்குப் பாவிக்கும் வண்ணம் கிருமிகளைத் தொற்று நீக்கஞ் செய்து, எத்தனையோ பாதுகாப்பு முறைகள் மூலம் உணவைப் பேணிக்கொள்ள முடிகின்றது.

உணவைப் பாதுகாத்தல் என்று கூறும் போது, அதில் பல பிரிவுகள் அடங்கும். வெப்பமூலம் கிருமியழித்தல், நீரகற்றல், குளிரேற்றல், இரசாயனப் பதார்த்தங்களைச் சேர்த்தல் போன்ற முறைகளைப் பயன்படுத்திப் போத்தல்களில் அல்லது தகரங்களில் அடைப்பதால் உணவு நன்கு பதனிட்டுப் பாதுகாக்கப்படுகிறது.

150⁰ ப இல் நுண் கிருமிகள் யாவும் கொல்லப்படுகின்றன. எனவே அவற்றின் வித்திகளை அழிப்பதற்கு 260⁰ ப இற்கு வெப்பத்தை ஏற்றும்போது உணவில் இயற்கையாயமைந்த நொதியங்களும் அழிக்கப்படுவதால் கிருமி நீக்கம் செய்தபின், காற்றோ, நுண்கிருமியோ உட்புகாத வகையில் தகரத்திலடைக்கப்படும் உணவு நீண்ட நாட்களுக்குப் பழுதடையாமற் பேணப்படுகிறது. இம்முறையில் பேணும்போது, தகரங்கள் வெள்ளீயம் அல்லது மிகக் குறைந்த எனமல் அல்லது அரக்குச் சாயம் பூசப்பட்டதாயிருக்க வேண்டும். அன்றேல் தகரம் கறள் பிடித்து உணவு பழுதடையும். ஆனால் அமிலத் தன்மையான பொருட்களை எனமல் பூசிய தகரத்திலடைப்பது தவிர்க்கப் படல் வேண்டும்.

மீன்களைப் பொரித்து எண்ணெய் அல்லது தக்காளிச் சாறு சேர்த்துத் தகரத்திலடைக்கலாம். அத்துடன் ஒ க்கிய பால், நீரகற்றப்பட்டுத் தடிப்பாக்கிய பால், இறைச்சி, மீன் இவைகளையும் தகரத்திலடைக்கலாம். மரக்கறிகளையும் பழங்களையும் தகரத்திலடைப்பதற்குப் பதனிடும் போது அவற்றிலுள்ள உயிர்ச்சத்து '' பீ '' யும் '' சி '' யும் ஓரளவு அழியும். அதிகம் பழுக்காத பழங்களாக எடுக்க வேண்டும். சாரம் சேர்ந்த பழங்களை நீர் சேர்க்காது அவிக்கலாம். பழங்களை நீர் சேராது போத்தலிலிட்டுக் கிருமியழித்துப் பின் கொதி நீரூற்றுவதும் ஒருமுறை. அல்லது நீர் சேர்க்காமல் சீனி சேர்த்துக் கிருமியை நீக்கியுமடைக்கலாம். பழங்களை மசித்துக் கல்சியமிருசல்பைற்றைச் சேர்த்தும் பேணலாம். புளிப்பதிகமான பழங்களைப் போத்தலில் நெருக்கமாயிட்டுத் தண்ணீரை விட்டுக் காற்றுப் புகாது மூடியும் பாதுகாக்கலாம் ஏனெனில், அமிலஞ் செறிந்த பழங்கள் இலகுவில் பழுதடையாது.

முந்திரிகை வற்றலை உலர்த்திக் காற்றுப் போகாது போத்தலில் இட்டு இறுக மூடிப் பேணுவது நீரகற்றல் முறையாகும். இம் முறையில், சுற்றிக்கொண்டிருக்கும் வெப்பக் காற்றில் உருளையமைந்த இயந்திரத் தட்டுக்களில் பாலை விட்டு விசிறல் மூலம் வெப்பக்காற்றைச் செலுத்துவதால் நீரகற்றலாம். இதனால் பால், முட்டைகளைப் பதனிட்டுப் பேணலாம்.

குளிரேற்றல் மூலம் சிறிது காலத்திற்கே உணவைப் பேணிக் கொள்ளலாம். எனவே, இதில் மரக்கறிகள், பழ வகைகள், இறைச்சி, மீன், போன்றவற்றை அப்போதைக்கப் போது வைப்பதற்குப் பாவிக்கலாம். எனினும் வாரம் ஒருமுறை வாங்கக்கூடிய பொருட்களை வாங்கிப் பாதுகாத்து வைக்க முடியும். குளிரேற்றும் போது அதன் குறை வெப்பநிலையில் அளவீடுண்டு. குளிரேற்றியில்லாத வீடுகளில் பனிக்கட்டிப் பெட்டியைப் பயன்படுத்தலாம். அதி குறைந்த வெப்பநிலையில் நுண்கிருமிகள் கட்டுண்டிருக்கும். குளிர் குறைந்ததும் அவை அழிவை உண்டாக்கக்கூடும்.

மரக்கறி, பழ வகைகளுக்கு $90^0$ சதம வெப்பநிலையும்; முட்டை பால் போன்றவற்றைப் பேண $32 - 45^0$ ப வெப்பநிலையும்; மீன், இறைச்சி, வெண்ணெய், போன்றவற்றுக்கு $0 - 32^0$ ப வெப்பநிலையும் தேவையாகும். குளிரேற்றும் போது வெப்பமும் காபனீரொட்சைட்டும் வெளியேறுவதால் அங்கு போதிய காற்றோட்டமும், அவ்வறையில் ஈரலிப்பும் இருக்க வேண்டும். குளிரச்செய்த உணவு புதியவையாயும், எல்லாச் சத்தும் பாதுகாக்கப்பட்டும், அழகான தோற்றமாயும் இருக்கும். கொழுப்பில் ஊசித்தன்மையுண்டாகி உயிர்ச்சத்து சியும் சிறிது பாதிக்கப்படும். குளிரேற்றப்பட்ட இறைச்சி ஒருமாத காலம் வரை பழுதடையாது. குளிர வைக்கும் போது நீர் ஆவியாகி வெளியேறுவதால் இறைச்சியை ஆவி வெளியேறாத கடதாசியால் சுற்றி வைக்க வேண்டும். கோழி இறைச்சியை மூடித் தோல் இருப்பதால் அதைச் சுற்றி வைக்கத் தேவையில்லை.

மீனை 25 நிமிடத்திற்குள் $32 - 41^0$ ப இல் உறையச்செய்தால் மாற்றமேற்படாது. புதிய மீன் மட்டுமே இதற்குச் சிறந்தது. 24 மணித்தியாலத்திற்கு மேல் வைத்திருக்கக் கூடாது. மீனை நீண்டகாலம் பேணுவதானால் $40^0$ ப இல் உறைய வைத்து ஆவி கழியாமலும் சுவை குன்றாமலும் பனிக்கட்டியால் மெருகூட்டி $10^0$ ப இல் குளிரறையில் வைக்க வேண்டும். இடையிடையே துண்டுப் பனிக்கட்டிகளை அவ்வறைக்குள் இடவேண்டும். இம்முறையால் மீனை 5 — 10 மாதங்களுக்குப் பேணலாம்.

முட்டை உலரறையில் ஆவியாவதால் முட்டையுள்ளிருக்கும் வாயுவடர்ந்த இடம் படிப்படியாகக் கூடுமாகையால், முட்டையைக் குளிரவைத்துப் பூசனம் படியவிடாது ஈரப் பதனைக் கட்டுப்பாடான நிலையில் வைக்க வேண்டும். காபனீரொட்சைட்டு செறிவாக நிரப்பப்பட்ட அறைகளில் பூசனம், பற்றீரியா தொற்றுவண்ணம் பேணப்படுவதை "வாயு சேமிப்பு" முறையென்பர்.

